1273

I. 1803. NOVEMBER 1927 Vol. V. No. 4

OFFICE OF THE REGISTRAR
No.
8-DEC 1927
MADRAS

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2 வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் — — — — — அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு, தினசரி, துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முள நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்

கிடைக்கவில்லையே! என்று வருந்தவேண்டாம்

ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்குமேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

முந்துங்கள்! இதுவே தருணம்!!

முத்தையாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம். காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1	டுயில் ஷர்ட் 1-க்கு விலை	ரூ. 2—0—0.
,, 2	காக்கி ஷர்ட் விலை	ரூ. 2—4—0.
,, 3	இங்கிலீஷ் டுயில் ஷர்ட்	ரூ. 2—4—0.
,, 4	அமெரிக்கன் டோரியா	ரூ. 2—4—0.
,, 5	உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ. 3—8—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

ஓம்

லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR OF
8-DEC 1927
MADRAS

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	பிரபவஹூ கார்த்திகைமீ 1927 நவம்பர்மீ	இதழ் 4.

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி 167
2. முரசு 168
3. இரசம் அல்லது சூதம் 169
4. நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத் தலைவன் 173
5. தமிழ் 179
6. கண்ணப்பநாயனர் சரிதை 187
7. ஸ்ரீ ஹர்ஷ சரிதம்... 191
8. கடோரசித்தன் கதை 195
9. தேகாப்பியாசம் 199
10. மதுசாரம் 202
11. பத்திராசிரியர் குறிப்புகள் 207
12. தென்னாட்டார் ஒற்றுமை 210

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.

லக்ஷ்மி துதி

உத்தமச் சற்குரு சேவை யெய்
தாகிங் குழலு மெனக்கு

இத்தனை ஆசை கொடுத்திட்ட தார்
சற்றியம்பு கண்டாய்

மத்தக வேழம் புரந்த பிரானை
மனத்தி லுன்னிப்

பத்தமுற்றார்களை யெந்நாளுங்
காக்கும் பதும மின்னே.

முரசு

(முன் தொடர்ச்சி)

18. நிகரென்று கொட்டுமுரசே—இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதிவகுப்பினை யெல்லாம்.

19. அன்பென்று கொட்டுமுரசே—அதில்
ஆக்க முண்டா மென்று கொட்டு
துன்பங்கள் யாவுமே போகும்—வெறுஞ்
சூதுப்பிரிவுகள் போனால்.

20. அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரு மொன்றென்று கொண்டால்.

21. உடன் பிறந்தார்களைப் போலே—இவ்
வுலகில் மனித ரெல்லாரும்
இடம் பெரிதுண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

22. மரந்தனை நட்டவன்—நன்கு
வார்த்ததை யோங்கிடச் செய்வான்
சிரத்தையுடையது தெய்வம்—இங்கு
சேர்த்த வுணவெல்லை யில்லை.

23. வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழு மனிதரெல்லோர்க்கும்
பயிற்றி யுழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

—பாரதி.

இரசம் அல்லது சூதம்

(ஸ்ரீமான் எஸ். எஸ். ஆனந்தம் எழுதியது)

இரசத்தின் இயற்கைக் குணம்.

இரசம் மினு மினுப்பும், பளுவும், வெண்ணிறமுமான, வெள்ளி போன்ற நீரான லோகம். இதற்கு மணம், சுவை இல்லை. இது பெரும்பாலும் சுரங்கங்களில் பவள மனோசிலை என்னும் கட்டிப் பொருளா யிருக்கும். இது அதிகமாக எடுக்கப்படும் சுரங்கங்கள் ஸ்பெயின், ஆஸ்ட்ரேலியா, கலிபோர்னியா, சீனம், ஜப்பான், முதலிய நாடுகளில் மிகுதியா யிருக்கிறதாகத் தெரிகிறது. சுரங்கங்களிலிருந்து எடுத்த கட்டிப் பொருளைத் தீயிட்டு இரசத்தை ஆவியாக்கிப் பிறகு, ஆற்றிப் பிரித் தெடுப்பார்கள். இதைப் பதங்கமாக யெடுப்பதும் உண்டு, இரசம் 39 பாகை (டிகிரி)க்குக் குறைந்த கடுங்குளிருக்கு உறைந்து பலகையாகத் தட்டக் கூடியதாகும். 662 பாகை (டிகிரி) சூடேற்றக் கொதித்துக் கண்ணுக்குத் தோன்றாத ஆவியாகிவிடும். 40 பாகைக்கு மேற்பட்ட எந்த சூட்டிற்கும் இரசம் கொஞ்சமாக ஆவியை விடும். இரசம் வெப்ப, தப்ப காற்றுக்குக் கரை பிடியாது, கொதிசூட்டுக்கு கிட்டும்போது மெல்ல மெல்ல உயிர்வளியை (பிராணவாயுவை) உறிஞ்சி இரச செவ்வச்சிரம் யெனும் கருஞ் சிவப்பான பொடியாகும். இதை சிறிது சிவக்கக் காய்ச்சினால் அதினின்று பிராணவாயுவு பிரிந்து பறக்க இரசம் நிற்கும், இந்தத் தாளைக் கொண்டே பிராணவாயு உண்டென்பதும், பரமாணுவின் கலவை இன்னதென்பதும், முதன்முதல் காணப்பட்டன.

இரசம் கெந்தகத் (திராவகத்தில்) தீநீரிலும், பொட்டிலுப்பு தீநீரிலும் மிக விரைவாய்க் கரையும். கரியுப்பு திராவகத்தில் (ஐட்ரோகுளோரிக் ஆஸிட்) ஆயினும், தண்ணீர் கலந்த (சல்பியூரிக் ஆசிட்) கந்தகத் தீநீரிலாயினும் கொஞ்சமும் கரையாது. இரசத்தைக் கெந்தகம், சீனச்

சர்க்கரை, நெய் முதலியவையோடு நன்று யரைத்தாலும், டர்பண்டயின் எண்ணெயோடாவது, ஈதரோடாவது நன்ருகக் கலக்கினுலும், அது மிக நுண்ணிய அணுக்களாகப் பிரிந்து மினுக்கம் அற்று அப்பொருள்களோடு கலந்து விடும். இரசம் இயற்கையான முழு உருவத்தில் மருந்துக்கு உதவாதிருந்தும் இப்படி பக்குவப்படுத்தின நுண்ணிதான நிலையில் அது உடம்பில் கலந்து பயன் தரும் மருந்தாகும்.

இரசம், பொன், வெள்ளி, ஈயம், நாகம், இவைகளோடு சேர்ந்து ஒருவித களிம்பாகும். இரசம் காற்றிலுள்ள குளிர்ச்சியையும் சூட்டையும் காட்டக்கூடிய அளவைக்கருவிகளுக்கும், சுரங்கங்களிலிருந்தெடுத்த பொன், வெள்ளி முதலிய லோகங்களைக் கல் மண்ணிலிருந்து பிரித்தெடுத்துச் சேர்ப்பதற்கும், கண்ணுடிகளில் ஒரு பக்கம் முலாம் கொடுத்து உருவங்களைக் காண்பதற்கும், இன்னும் பல தொழில்களுக்கும் மருந்துகளுக்கும் மிகுதியாகச் செலவாகும்.

இரசம் பதங்கமாகவோ, செந்தூரமாகவோ, நீறு (பஸ்பம்) ஆகவோ, மெழுகாகவோ செய்து குறைந்த அளவில் நாள் பட உடம்பில் செலுத்துவதால் நரம்பைப் பற்றிய வாதரோகங்களும், மேக சம்பந்தமான சில நோய்களும் நீங்கும். ரசக்களிம்பு, ரசப்பிளாஸ்திரி, ரசப்புகை இவைகளின் மேல் உபயோகங்களால் தோலைப்பற்றிய நோய்கள், இரணங்கள் நீங்கும்.

ரசமருந்துகள் பல்லில் படும்படி தின்ருல் பல் ஈறு சுரந்து வாய் வெந்து விடுமென்று சிலர் சொல்லுகிருர்கள். அது தவறு, ரசமருந்தை அளவு மீறி அருந்தினுல் இரத்தம் கொதித்து பல்ஈறு வேகும், குடலில் புண் உண்டாகும். ரசமருந்து சாப்பிடுங்காலத்தில் உமிழ் நீர், பித்த நீர் மிகச் சுரந்தாலும், மலத்தில் பித்தம் மிகக் கலந்து கொதிப்பாயிரங்கினுலும், வாயில் கெட்ட நாற்றம் உண்டாகி பல் ஈறு சுரந்தாலும் ரசம் உடம்பில் கலந்து பிடித்ததென அறியலாம். ரசமருந்து மிகத் தின்ருல் வயிற்றுக்கடுப்பு, பேதி, பல், ஈறு, கன்னங்களில் அழிவுரணம், உமிழ் நீர் வடிதல். வாய் நாற்றம், தொண்டைப் புண், பற்கள் விழுதல், முக

வீக்கம், காய்ச்சல், பலக்குறைவு, உடல் காந்தல், நடுக்கல் முதலிய தீக்குணங்கள் உண்டாகும். ஆயினும் மருத்துவர்கள் சில நோய்களுக்கு ரசமருந்து கொடுக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது. நோய்க்கூறு, உடற் கூறு தெரிந்து, மிகக் குறைந்த அளவில் நீண்ட நாள் கொடுத்து வருதல் நலமாகும். கைக்குழந்தைகளுக்கும், கிழவர்களுக்கும் ரசமருந்து கொடுக்கக் கூடாது, கொடுத்தாலும் அவ்வளவு விரைவில் வாய் வேகாது, மூளை அழர்ச்சி அடைந்திருந்தாலும், கல்லீரல் சீழ் பிடித்திருந்தாலும் வாய்பிடியாது.

இரசத்துக்கு முறிவு (சத்துரு)ப் பொருள்கள்.

சுண்ணும்பு நீர், காடிக்காரம், வாந்தி உப்பு, வங்க உப்பு, விளக்கெண்ணெய், நீலி, வெண்சங்கிலைச் சாறு, வெற்றிலைச் சாறு முதலியவைகளாகும்.

இரசத்துக்கு உணவு வகைகளில் முறிவு (சத்துரு)ப் பொருள்கள்.

முட்டைக்கரு, பால், தயிர், கோதுமை மா, ஊன்வகைகள், அகத்திக்கீரை, பாகற்காய், பூசணிக்காய், நல்லெண்ணெய் முதலியவைகளாகும்.

ரசமருந்து உண்ணுகிறவர்கள் காற்றில் உலாவாதிருந்தால் விரைவில் நோயைக் கண்டிக்கும். ரசமருந்து கொடுக்கக்கூடாத பல வியாதிகள் உண்டு. ரச செந்தூரம் ரச பதங்கம், ரச பஸ்பம் இவைகளைப் பொதுவாக ஒரு நெல் எடை மருந்தை பத்து பாக மாக்கி ஒரு நாளைக்கு இரண்டு வேளை கொடுக்கலாம்.

உட்செலுத்தும் மருந்தின் அளவு, காலம், உணவு, உடம்பு, நோய், வயது இவற்றிலுள்ள வேற்றுமைகளுக்குத் தக்கபடி விரைவாகவும், தாமதமாகவும் வாய் பிடிக்கிறதுண்டு.

இரசமருந்து புகைபோடுவதாயிருந்தால் மனிதர்களின் தலை வெளியிலிருக்கும்படி கோழிக்கூடுபோல் தயாரித்த கூட்டினுள் உட்காரவைத்து புகை போடுவ

துண்டு, அதனால் தோலைப் பற்றின சில நோய்களும், இரணங்களும் விரைவில் நீங்கும், ஆனால் வாய் சீக்கிரம் பிடிக்கும். ரசப்புகைபோடுகிறவர்களும், போட்டுக்கொள்ளுகிற பிணியாளர்களும் தங்கள் கண்களில் ரசப்புகை படாமல் காத்துக்கொள்ளல் வேண்டும். ரசத்துடன் சேரும் மற்ற பொருள்களுக்குத் தக்கபடியும் செய்பாகத்துக்குத் தக்கபடியும் ரசம் தேகத்தில் வேலை செய்கின்றது.

சூதத்தை மணியாகச் செய்து, துளைத்து கயிற்றில் கோர்த்து இடுப்பில் கட்டிக் கொள்வதாலும், கழுத்தில் கட்டிக்கொள்வதாலும் வாயில் அடக்கிக் கொள்ளுவதாலும் பல காரியங்கள் நடைபெறுமென சொல்லப்பட்டிருக்கிறது, அனுபவத்தில் இதனை முற்றும் நம்புவதற்கில்லை.

வாலைரசம் அல்லது லிங்கரசம்,

கடைகளில் விற்கிற ரசத்தில் ஈயத்தைச் சேர்த்துவிடுகிறார்களாதலால் மருந்து செய்வதற்கு லிங்கத்திலிருந்து எடுக்கும் ரசம் நல்லது. அதனை வாலைரசம், அல்லது லிங்கரசமெனக் கூறுவார்கள்.

லிங்கத்திலிருந்து ரசம் எடுக்கும் முறை.

சாதிலிங்கத்துடன் சுண்ணாம்பு அல்லது அயம் சேர்த்து வாலையிலிட்டு எரித்தால் தனிரசம் இறங்கும்.

மற்றொரு முறை.

வேண்டிய அளவு லிங்கத்தை ஒரு மண் குடுவை (கலயம்)யில் இட்டு நன்னாரிவேர் தூளைச் சேர்த்து, வேறொரு குடுவையால் மூடி ஏழுதரம் சீலை மண் செய்து வாலுகாயந்திரத்தில் மணலில் வைத்து ஒரு ஜாமம் எரித்தால் ரசம் மேல் குடுவையில் படியும், குடுவை குளிர்ந்த பிறகு பன்றி மயிர்க்கற்றையால் துடைத்து எடுத்துக் கொள்ளவேண்டியது. இதற்கு வாலைரசமெனப்பெயர்.

ரசத்தை சுத்தி செய்யுமுறையையும் மருந்துகள் செய்யும் வகையினையும் பின்னர் எழுதுவோம்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத்தலைவன்

(ஸ்ரீமான் சீனி. வேங்கடசாமி எழுதியது.)

5-வது அத்தியாயம்.

யோகக்காட்சி

நட்டாஜி புலிக்குகைக்கு வந்து இரண்டு வருஷங்கள் கழிந்து விட்டன. மேகங்கள் தாரை தாரையாகப் பொழிந்த மழைகாலம் கடந்து இப்போது முன் பனிக் காலம் தொடங்கியது. புலிக் குகைக்குச் சுற்றுப் புறங்களிலுள்ள இயற்கைக் காட்சிகள் அனைத்தும் கண்களைக் கவர்கின்றன. தாரை தாரையாகப் பொழிந்த மாசற்ற மழைத் தண்ணீர் மரம் செடி புல் புதர் முதலிய எல்லாப் பொருள்களையும் துப்பறக் கழுவி விட்டபடியால் அவையாவும் புதுத் தோற்றத்துடன் காணப்படுகின்றன. மலைச்சாரல்களிலும் பள்ளத் தாக்குகளிலும் பச்சைப் பசேலென்று பசும்புற்கள் படர்ந்திருப்பது இயற்கை எழிலை இனிது விளக்குகிறது. இவ்விதமான முன் பனிக்காலத்தில் ஒரு நாள் காலையில் சூரியன் கிரணங்களைப் பரப்பி மெல்ல மெல்ல மேலெழுந்தான். காலைக் கதிரவனைக் கண்டு புன் முறுவல் செய்வதுபோல இயற்கையின் எழில் இனிது விளங்கிற்று.

காளைப் பருவமும் கட்டழகும் வாய்ந்த நட்டாஜி, புலிக்குகையின் வாயிற் புறத்தில் நின்று இயற்கையழகைப் பார்த்துக் களித்துக் கொண்டிருந்தான். இச்சமயம் சன்னியாசி கூப்பிடுங்குரல் அவன் காதில் விழுந்தது. நட்டாஜி குகைக்குள் சென்று சுவாமிஜியைக் கும்பிட்டுப் பணிவுடன் நின்றான். சுவாமிஜி மிகுந்த இரக்கமும் அன்பும் கூடிய பார்வையுடன் அவனைப் பார்த்து அவனை அருகில் உட்காரும்படிச் சொன்னார். நட்டாஜி உட்கார்ந்தான். அவர் பேசத்தொடங்கினார்.

“தம்பி! இப்பொழுது சில விஷயங்களைச் சொல்லப் போகிறேன். அதைக் கவனமாகக் கேட்க வேண்டும். நான் சொல்லப் போகிற இந்த விஷயங்கள் இன்று காலையில் எனக்கு யோகக்

காட்சியில் தோன்றின. அவை வருத்தந் தரக் கூடிய விஷயங்களா யிருக்கின்றன. ஆயினும் அவற்றை உனக்குச் சொல்ல வேண்டி யது அவசியமாயிருக்கிறது.

“ மகனே ! நம் இருவர் வாழ்க்கையிலும் ஒரு பெரிய மாறுதல் ஏற்படப் போகிறது. பிறந்தவர் இறப்பது உலக இயற்கையன்றோ? அதன்படி, இவ்வுலகத்தை விட்டுப் பிரிய வேண்டிய நாள் நெருங்கி விட்டது. ஆனால், எந்தவிடத்தில் எச்சமயத்தில் என் உயிர் நீங்குமோ அறியேன்.',

இதைக் கேட்டவுடன் நட்டாஜியின் முகம் மாறுபட்டது. அவன் முகத்தில் வருத்தக் குறிகள் தோன்றின. அவன் உள்ளம் வருந்தியது. ஆனாலும், அவற்றை யெல்லாம் வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டு சுவாமிஜி இன்னும் சொல்லப் போகிற விஷ யத்தைக் கேட்க ஆவலோடு வாய்திறவாமல் இருந்தான். சுவாமிஜி தான் கண்ட யோகக் காட்சியை மேலும் சொல்லலானார்.

“ மகனே ” என்று அவர் பேச ஆரம்பித்தபோது அவர் கண் களில் இரக்கமும் வருத்தமும் தோன்றின. ஆனால் உடனே அவற்றை அடக்கிக் கொண்டார். “ மகனே ! உனக்கும் மரணம் சமீபித்திருக்கிறது. உன் இளமையிலேயே நீ இறக்கும் நாள் நெருங்கிவிட்டது. ஆனால், கடவுள் அருளால் நீ தப்பிப் பிழைக்கக் கூடும் என்று என் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஆமாம்! நட்டாஜி! நீ மரணத்திலிருந்து தப்பிப் பிழைப்பாய். மரண ஆபத்திலிருந்து நீங்கிய பிறகு உன் தாய் நாட்டிற்குச் சிறந்த தேசத் தொண்டு செய்வாய். தனிப் பெருங்கடவுள் தேசம் படும் கஷ்டத்தை யறிந்து கருணை சுரந்து ஒரு மகானை அனுப்பி யிருக்கி றார். அவர் மகாராட்டிரர்களின் துணைகொண்டு அவர் முகம்மதியர் களை, முகம்மதிய அரசாட்சியைத், தொலைத்து மகாராட்டிர தேசத் திற்குச் சுதந்தரம் அளிக்கப் போகிறார். அவருக்கு வலதுகை போல் நீ உதவியாயிருந்து நீ தேசத்திற்காக உழைக்கப் போகிறாய். நட்டாஜி! என் யோகக்காட்சியில் காணப்பட்ட இவையெல்லாம் சீக்கிரத்தில் நடை பெறும் ” என்று யோகானந்த சுவாமிகள் தாம் யோகக் காட்சியில் கண்டதை நட்டாஜிக்குச் சொன்னார்.

பிறகு அவர் நட்டாஜிக்குச் சில நற்போதனைகளைச் சொன்னார். அவன் தன் வாழ்நாளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவனுக்கு விளக்கிச் சொன்னார்.

"நட்டாஜி! மகனே! நான் இந்த உலகவாழ்வை விட்டு நீங்கிப் பிறகு நீ அந்த மகானைத் தேடிச் செல்ல வேண்டும். அவரிடஞ் சென்று தேச விடுதலைக்காக அவர் பக்கத்தில் நின்று போராட வேண்டும். நான் உனக்குக் கடைசியாக இடுங்கட்டளை இதுவே.

ஈட்டி எறிவதிலும் வில்லை வளைத்து அம்பு எய்வதிலும் வாட் போர் செய்வதிலும் உன்னை மிஞ்சிய வீரன் இல்லை என்றே சொல் வேன். ஆனாலும் இன்னுமொரு புதிய வித்தையை நீ கற்றுக் கொள்ள வேண்டும். குறிதவறாமல் அம்புவிடக் கூடிய நீ அந்த வித்தையையும் சுலபமாகக் கற்றுக் கொள்ளக் கூடும். அந்த வித்தை என்ன வென்றால் பறங்கிகளின் துப்பாக்கியைக் குறிதப்பா மல் சுடுவதுதான். கடைசியாக நான் உனக்குச் சொல்ல வேண் டிய தொன்றுண்டு. உன்தாய் நாட்டின் சுதந்தரத்தையும் உரிமை யையும் சமயத்தையும் அமைதியையும் காக்கும் பொருட்டன்றி அநாவசியமாக உன்வாளை உறையிலிருந்து எடுக்காதே. உன்கை வல்லமையைக் காட்டுவதற்கு உன்கையில் வாள் கொடுக்கப்பட வில்லை என்பதையும் எளியவர்களைத் துன்புறுத்தும் வலியவர்களைத் தண்டிப்பதற்காகவும் தேச விடுதலைக்காகவும் உன்கையில் வாள் கொடுக்கப் பட்டிருக்கிறதென்பதையும் ஒரு போதும் மறவாதே. உனக்குள்ள ஆண்மையினாலும் வல்லமையினாலும் நீ எந்த காரியத்தையும் எளிதில் செய்துவிடக்கூடுமாயினும் அது உன்தேக பலத்தை உபயோகப் படுத்து முன் உன் புத்தியைக் கலந்து யோசனை செய். மகனே! இவ்வளவுதான் நான் உனக்குச் சொல்ல வேண்டியது"

இவ்வாறு யோகானந்த சுவாமிகள், தமது யோகக் காட்சியில் கண்ட செய்திகளையும் அவன் நடந்து கொள்ள வேண்டிய புத்தி மதிகளையும் சொல்லி முடித்தார். அவர் சொல்லியவைகளை யெல் லாம் நட்டாஜி கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்தவுடன் சுவாமிஜி அவனை அனுப்பி விட்டுத் தேசத்தின் விடுதலைக்காகக் கடவுளை நோக்கி அன் புடன் மனமுருகிப் பிரார்த்தித்தார்.

நட்டாஜி, குகையை விட்டு வெளிவந்தான். அவன் மனம் கலக்கமடைந்திருந்தது. தன் குரு சொல்லிய ஒவ்வொரு வார்த்தை யையும் அவன் ஆழ்ந்து சிந்தித்தான். தன் தாய் நாட்டிற்கு ஊழி

யம் செய்யவும் மகாராட்டிரரின் விடுதலைக்காகப் போர் செய்யவும் தன் குரு தனக்கு உத்தரவு கொடுத்ததற்காக மனமகிழ்தான். தேச ஊழியம் செய்யுங்காலம் சமீபித்திருப்பதை எண்ணி அடங்கா ஆனந்தங் கொண்டான். ஆனால், அதே நிமிஷத்தில் தன் குரு சீக்கிரத்தில் மரண மடைந்து விடுவார் என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியபோது அவன் மகிழ்ச்சி யெல்லாம் மறைந்து விட்டன. அவர் இன்னும் சில வருஷங்கள் உயிருடன் வாழ்ந்திருந்து தனக்கு தேச ஊழியத்தில் வழிகாட்டவேண்டும் என்று கடவுளை வேண்டினான். இன்னும், அவன் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. தன் சகோதரி கங்காபாயைப் பற்றிய எண்ணமும் அவன் மனதில் தோன்றியது. பற்பல எண்ணங்கள் அவனைச் சூழ்ந்து கொண்டன. தன்னையறியாமலே அம்மலைமேல் சற்று தூரம் நடந்து சென்றான். கடைசியாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தன் மனதில் தோன்றிய எண்ணங்களைப் பற்றிச் சிந்தித்த வண்ண மிருந்தான். இவ்விதம் தன்னை மறந்து சிந்தனையிலிருந்த அவன் எவ்வளவு நேரம் அவ்விதம் இருந்தானென்று அவனுக்கே தெரியாது. நேரம் செல்வதும் அவனுக்குத் தோன்றவில்லை.

அப்பொழுது திடீரென்று ஒரு பயங்கரமான கர்ஜ்ஜனை கேட்டது. அதே வினாடியில் கனத்த பொருள் தொப்பென்று கீழே விழுந்த சத்தங்கேட்டது. நட்டாஜி திடுக்கிட்டான். அவன் யோசனைகளெல்லாம் சிதைந்து ஓடின. திடுக்கிட்டெழுந்த அவன் சத்தம் வந்த திசையை நோக்கினான். என்ன ஆச்சரியம்! தனக்குப் பின்னால் இருபதடி தூரத்தில் பயங்கரமான ஒரு கொழுத்த புலி தரையில் விழுந்து கிடக்கிறது! அப்புலியின் கீழ் ஒரு மனித உருவம் காணப்படுகிறது! இதைக் கண்டதும் நட்டாஜி நடுங்கி நின்றான். பிறகு புலி அசைவற்றிருதபதைக் கண்டு அது இறந்து விட்டது என்று அறிந்து அருகில் சென்றான். "ஆ! எவ்வளவு பருத்த கொழுத்த வரிப்புலி! அதன் கீழே மனித உருவமும் காணப்படுகிறது! அந்த மனிதன் யாராயிருக்கக் கூடும்? அவன் இறந்து விட்டானா? உயிரோடிருக்கிறானா?" என்று பலவாறு நினைத்த வண்ணம் நட்டாஜி அருகில் சென்று அம்மனிதனை உற்று நோக்கினான். இறந்தவன்யார் என்று பார்த்தபோது, அந்தோ! என்ன அநியாயம்! எவ்வளவு பரிதாபம்! புலியின் கீழ் கிடக்கும் மனிதன் தன் குருவாகிய யோகானந்த சுவாமிகள் என்று நட்டாஜி

கண்டான். உடனே அவன் ஆத்திரத்தோடு ஓடி, புலியை ஒரு புறம் தள்ளி அவருக்கு உயிர் இருக்கிறதா என்று பார்த்தான். பாவம்! யோகானந்த சுவாமிகள் இறந்து கிடக்கிறார். அவர் மண்டை பிளந்து மூளை வெளிவந்திருக்கிறது. அவர் கையிலிருந்த ஈட்டி புலியின் மார்பில் பலமாய் ஊடுருவிப் பாய்ந்திருந்தது. புலியும் பிணமாய்க் கிடக்கிறது. அந்தோ! இந்த நல்ல தேசாபிமானியும் கடவுள் பக்தியும் உள்ள யோகானந்த சுவாமிக்கு இக்கதியும் வர வேண்டுமோ? தன் குரு பிணமாய் கிடக்கிறதைக் கண்டதும் நட்டாஜி பயித்தியம் பிடித்தவனைப் போல் ஏங்கி நின்றான். அவன் கண்களில் தாரைதாரையாக நீர்வடிந்தது. அவன் ஒரு குழந்தை போல ஓ வென்று வாய்விட்டுக் கதறினான். அவன் மனம்பட்ட பாட்டை நாம் எழுத்தால் எழுதிச் சொல்ல முடியாது.

நட்டாஜி மரத்தடியில் தன்னந்தனியே சிந்தனையில் ஆழ்ந்திருந்த சமயத்தில் எதிர்கால நிகழ்ச்சியை யறிந்த யோகானந்த சுவாமிகள் தமது கடைசி பிரார்த்தனையை முடித்துக்கொண்ட பின் நட்டாஜிக்கு நேரிடப்போகிற மரண ஆபத்தைக் குறித்து மனம் வருந்தினார். அவனுக்கு அன்றையதினம் ஏதோ மரண ஆபத்து நேரிடப்போகிறதென்பதை அவர் எவ்விதமாகவோ தெரிந்திருந்தார். தேச ஊழியத்திற் கென்று பழகப்பட்ட இந்த வீரன் நாட்டிற்குப் பயன் படாமல் சிறுவயதிற்றானே இறந்து போவது அவருக்கு மிகுந்த மனவருத்தத்தை யுண்டாக்கியது. ஆகவே, தன் உயிரைக் கொடுத்தாகிலும் அவனை மரண ஆபத்தி லிருந்து தப்பித்து வைக்க எண்ணங் கொண்டார். உடனே அவர் தமது ஈட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு நட்டாஜி உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்து வந்தார். அவ்விதம் வந்தவர் தற்செயலாக ஒரு பயங்கரமான காட்சியைக் கண்டு திடுக்கிட்டு அசைவற்று நின்றார். அந்த பயங்கரமான காட்சி என்ன வென்று நினைக்கிறீர்கள்? நட்டாஜி உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு நாற்பதடி தூரத்தில் உள்ள ஒரு மேட்டில் ஒரு புதரிலிருந்து ஒரு வரிப்புலி நட்டாஜி மேல் பாய்ந்து கொல்வதற்கு ஆயத்தமாக வாலையாட்டிக் கொண்டு நிற்பதை சுவாமிஜி கண்டார். உடனே அவர் ஒன்றுந்தோன்றாமல் அவ்விடத்திலேயே நின்று விட்டார். அதே நிமிஷத்தில் அவ்வரிப் புலி நட்டாஜிமேல் பாய்வதைவிட்டு இடையே வந்து நின்ற சுவாமி மேல் பாய்ந்தது. புலி தன்மேல் பாய்ந்ததைக் கண்ட சுவாமிஜி தன்

கையிலிருந்த ஈட்டியால் அப்புலியைத் தாக்கினர். சுவாமிஜியின் குறிதவறவில்லை; ஈட்டி புலியின் மார்பில் ஊடுருவிப் பாய்ந்தது. புலியின் பாய்ச்சலும் குறிதப்பவில்லை. அது அறைந்த அறையினால் சுவாமிஜியின் மண்டை பிளந்து போயிற்று. ஈட்டியும் புலியின் மார்பில் பலமாய் பாய்ந்து விட்டபடியால் அது கதறிக் கொண்டே தொப்பென்று வீழ்ந்தது. இந்த சத்தந்தான் சிந்தனையில் ஆழ்ந் திருந்த நட்டாஜியைத் திடுக்கிட்டெழச் செய்தது. பாவம்! யோகானந்தரின் வாழ்வு இவ்வாறு முடிவடைந்தது. அவர் அன்று காலை சொன்ன தீர்க்கதரிசனத்தில் ஒரு பாதியும் அன்றைத் தினமே நடந்தேறிவிட்டது. அதாவது, தமக்கு மரணம் சமீபித்திருக்கிற தென்றும் நட்டாஜிக்கும் மரண ஆபத்து வரக்கூடுமானாலும் அவன் அதினின்று தப்பிப் பிழைப்பா னென்றும் சொல்லியது அன்றே நடந்தேறி விட்டது.

* * * * *

மலையில் வசிக்கும் ஜனங்களுக்கு யோகானந்த சுவாமிகள் இறந்த செய்திதெரிந்து அவர்களெல்லோரும் அங்குவந்து சேர்ந் தார்கள். அவர்கள் சுவாமிஜியைத் தகப்பனைப் போலவும் குரு வைப்போலவும் நேசித்து வந்தவர்களாதலால் மிகவும் விசனப் பட்டு அழுதார்கள். அவர்களில் வயது சென்றவர்கள், சன்னியாசி ஒரு வர் இறந்து விட்டால் அவர் ஆன்மா கடவுளுடன் கலந்து இன்ப நிலையடைந்து விடுமாதலால் அவர் இறந்து விட்டதற்காக வருத்தப் படக்கூடாது என்று ஆறுதல் சொல்லி எல்லோரையும் தேற்றி னார்கள்.

சுவாமிஜியின் சமாதியடக்கம் மிகுந்த உள்ளன் போடும் உண்மையுடனும் முறைப்படி செய்யப்பட்டது. அவருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளை யெல்லாம் பெரியோர்கள் முன்னிலையில் நட்டாஜியே செய்து முடித்தான். இவையாவும் செய்து முடிப்ப தற்குப் பன்னிரண்டு பதின்மூன்று நாட்கள் சென்றன. 1648-ம் ஆண்டில் அக்டோபர் மாதத்தில் நட்டாஜியின் வாழ்க்கையில் இவ் வித மாறுதல் ஏற்பட்டது.

(தொடரும்)

தமிழ்

(ஸ்ரீரங்கம் T. R. ஸ்ரீநிவாசன் B.A., எழுதியது.)

தமிழ் நூல்கள்.

ஏற்கனவே அறிவித்த வண்ணம், பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து சென்ற பின் வாழும் நமக்கு முதல்,இடைத்தமிழ்ச் சங்கத்து பொன்னேபோல் போற்றத் தகுந்த பல அரும்பெரும் நூல்கள் கிடைக்காமற் போயின. காலச் சக்கரத்தின் சுழற்சியிலே இடைப் பட்டதொரு பெரிய கடற் கொந்தளிப்பால் அவை யனைத்தும் முற்றுமே அழிந்துபோக நேரிட்டதுபற்றி தமிழுலகிற்கே ஏற்பட்ட நஷ்டம் சொல்லொணுத தாகும். ஆனுலும், நற்காலத்தின் அறி குறியாய் கடைச்சங்க நூல்கள் பலவும் இன்று நமக்குக் கிடைத்துள் ளன. கட்டுரையின் விரிவஞ்சி, தமிழ்நூல்கள் சிறந்தன சிலவற்றின் பெயர்க் குறிப்பு மட்டும் நம் சிற்றறிவிற்கு எட்டியவரை கீழே கொடுக்கிறேம். தமிழபிமானிகளாயுள்ள அனைவரும் கிடைக்கக் கூடியவற்றைப் படித்தானந்திக்க வேண்டுமென்பதே எமது நன் னேக்கம்.

(a) கடைச் சங்கநூல்களான முத்தொள்ளாயிரம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முதலியன. இவற்றின் விரிவு விவரம் கடைச்சங்க வரலாற்றின் கீழ்க்காண்க.

(b) தமிழ் ஐம்பெருங் காப்பியங்களாய் ஒளிர்வன; சீவகசிந் தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, சிலப்பதிகாரம், வளையாபதி, தமிழ் அணங்கின் கவின் பெறு அணிகலங்களாய்த் திகழும் இவை.

(c) இனி, ஔவை நூல்கள் : ஔவை குறள், ஆத்திசூடி முத லியன.

(d) கல்வியிற்பெரிய கம்பரது நூல்களான கம்பராமாயணம், சடகோபரந்தாதி, சரஸ்வதியந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழக்கம் முதலானவை.

(e) பெருந்தேவனுர் பாடிய உரைநடை யிடை யிட்ட பாட் டுடைச் செய்யுள் நூலாம் பாரதவெண்பா, வில்லிபுத்தூரார் பாரதம்.

(f) அதிவீரராம பாண்டியன் பாடியருளிய நைடதம்; புகழேந்திப்புலவரது நளவெண்பா.

(g) பாகவத புராணம்.

(h) வைணவர் தமிழ்வேத மெனக் கொண்டாடும் நாலாயிர திவ்யப்ரபந்தம், நால்வர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம், திருவாசகம் முதலான சைவத் திருமுறைகள்.

(i) திருவிளையாடற்புராணம் ; திருத்தொண்டர் புராணம் ; அரிச் சந்திரபுராணம் ; குசேலோபாக்கியானம் முதலானவை.

(j) தாயுமானவர்பாடல்; பட்டினத்துப் பிள்ளை பாடல் திருப்புகழ் முதலிய ஞானநூல்கள்.

(k) திருவாரூர் உலாபோன்ற உலா கிரந்தங்கள்.

(l) சீகபதி, சீகாளத்தி, சிதம்பரம், திருப்பெருந்துறை, திருவாரூர் முதலான தல புராணவகை.

(m) திவ்ய கவி பிள்ளைப் பெருமாளையங்கார் செய்தருளிய அஷ்டப்பிரபந்தம் போல்வன நூல்கள்.

இன்னும் எவ்வளவோ உள. அவற்றை ஆன்றோர்பால் கேட்டுணர்க.

† கடையெழுவள்ளல்கள் :—பாரி, ஓரி, காரி, பேகன், ஆஅய், அதிகமான், நள்ளி.

மேலும், தமிழ்க் கவிஞரில் எவரெவர் எவ்வெத்துறையில் நனி சிறந்தார் என்பது விளக்கும்

"வெண்பாவிற் புகழேந்தி, பரணிக்கோர் சயங் கொண்டான் விருத்தமென்னு
மொண்பாவிலுயர்கம்பன், கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தன்,
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள், வசைபாடக்காள மேகம்,
பண்பாகப் பகர் சந்தம் படிக்காசலா லொருவர் பகரொணதே'

என்ற செய்யுளின் துணைகொண்டு அவர்செய்த பல சிறத்த செய்யுணூலின் தொகுதி யறிந்து ஓதி மகிழ்வெய்துக.

தமிழ்

மேலே கூறிப்போந்தன யாவும் செய்யுள் சம்பந்தமான நூல் பற்றியாகும். தமிழ் வசன வரலாறும் முக்கியமான நூல்களும் தமிழறிஞர் தி. செல்வ கேசவராய முதலியார் எழுதிப்போந்த ' வசனம், என்ற விஷயத்தில் வெகு அருமையாகக் காண்கின்றன. ஆங்கும், பிறிதிடங்களிலும் கண்டு தெளிக. மேலும், பல திறப்பட்ட சாஸ்திர சம்பந்தமான நூல்கள் அனந்தம் ஆம்.

இவை தவிர, செய்யுள், எழுத்து, சொல் இலக்கணம் கூறும் தொல்காப்பியம், நன்னூல் முதலியனவும் ஒவ்வொரு தமிழரும் தெரிந்துகொள்ளவேண்டுவதான இன்றியமையாச் சிறப்புப் பெற்ற உயரிய கிரந்தங்களாம்.

தெய்வத்தன்மை நிரூபிக்கும் சான்றுகள்,

இதுபற்றி விரிவாக எழுதுவதானல் அதுவே ஒரு பெரிய தனி நூலாய் விடும். எனவே , சுருக்கமாகவும் குறிப்பாகவும் ஒரு சில உதாரணங்கள் மட்டும் கொடுப்போம். ஒவ்வொன்றின் விரிவான விவரம் கற்றுங்கறிந்தார் வாய்க்கேட்டு அறிக.

1. மதிமுகிழ்முடித்தவேணி, தம் மறைமுதற்கிளந்த வாயான் பாணினிக்கு வகுத்தருளின வடமொழிக் கிணையாத்தொடர்புடை தமிழ்மொழியை ஆதியில் அகத்தியருக்கருளி அவர்மூலம் கடலள வாய திசை யெட்டினுள்ளும் புகழ் மணக்க உலகில் பரப்பியது. பின்னும் தாமே அதற்கு 'இறையனாகப்பொருள்' என்ற சீரிய இலக்கணம் செய்து தந்தது.

2. முருகவேள் 'வீரசோழியம்' என்னும் இலக்கண நூல் அருளியீந்தது.

3. "தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்டபாலனை அழைத்ததும், எலும்புபெண்ணுருவாக்
கண்டதும், மறைக்கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ? மறுபுலச்சொற்களோ? சாற்றீர்.

4. மதுரை மூதூர் நீரறியவும், நெருப்பறியவும் சமணர்க்கெதிராக வாதாடிய ஞானசம்பந்தருக்கு வெற்றி விளைத்து மாண்புற விளங்கினது.

5. பொய்யாமொழிப் புலவரின் பனுவல் சீர்மையை பாண்டி யன் முன்னிலையில் நாற்பத்தொன்பதின்மரின் சிலைகள் சிரக் கம்பம் செய்து ஒப்புக்கொண்டன.

6. பொற்றாமரையில் அமிழ்ந்த சங்கப்பலகையை மிதக்கச் செய்தது.

7. கம்பராமாயணத்து 'துமி' என்ற பதப் பிரயோகத்தை ஒட்டக்கூத்தர் ஆட்சேபிக்க அஃது உலகவழக்காமென சாஸ்வதி தேவியே இடைச்சியாய் நிரூபித்தது.

8. கம்பர் தில்லை மூவாயிரவர் முன் சர்ப்பம் தீண்டிய பால னைத் தம் இராமாயண நாகபாசப்படலத்தொரு கவி மகிமையால் உயிர்ப்பித்துக்கொடுத்து, தமது நூலுக்கு அவர் தம் சம்மதம் பெற்றது.

9. கம்பர் இராமாயணத்தை ஸ்ரீரங்கம் திருப்பதியில் வைஷ் ணவ சமயாசாரியான ஸ்ரீமந்நாத முனிகள் உள்ளிட்ட வித்வகோஷ் டியில் அரங்கேற்றற்பொருட்டு அதனைப்பாடிக் கொண்டே வருகை யில் இடையே வருவதான இரணியவதைப் படலத்தை சிலாரூபி யாய் ஆங்கு எழுந்தருளியிருந்த நரசிம்மக் கடவுள் சிரக்கம்பம் செய் து கைகொட்டி ஆர்ப்பரித்து நன்றுமென ஏற்றுக்கவி மகிமை வெளி யிட்டருளியது.

10. திருவள்ளுவர் திருக்குறள் இனிது வீற்றிருக்க சங்கப்ப லகை இடமளித்தது.

11. வேதந்தமிழ் செய்த ஆழ்வார் பாசுர மகிமை யிகழ்ந்த மதுரைச் சங்கப் புலவர் செருக்கொழிந்து நாணித் தலைகுனியும் வண்ணம் "கண்ணன் கழலிணை, நன்னும் மனமுடையீர், என்னுந் திருநாமம், திண்ணம் நாரணமே." என்ற திருவாய்மொழிப் பா சுரம் பொறித்த சிற்றேடளவாய் சங்கப்பலகை சுருங்கி அதன்மே லேறி வீற்றிருந்த புலவர் யாவரும் பொற்றாமரைப் மொய்கையில் வீழுமாறு செய்து அதன் பெருமை வெளியிட்ட அபூர்வ நிகழ்ச்சி.

12. வில்லிபுத்தூரார் பாரதம் பாடி இழந்த கண் திரும்பவும் பெற்றது.

13. நக்கீரர் "திருமுருகாற்றுப்படை" பாடி தன்னையே யன்றி உடன் சிறை வைக்கப்பட்டிருந்த மற்றைய 999 பேரையும்

கொடிய பூதத்தின் கையினின்றும் முருகவேள் உதவியால் விடு வித்துக் கொண்டது. இறையனாரகப் பொருளுரை செய்தது.

14. சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடத்தொடங்கி ஆரம்பிக்கும் வழி இன்னதென அறியாது மயங்குகையில் " உலகெலாம் " என அடியெடுத்துக் கொடுத்தது.

15. ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபதுபாடி நவராத்திரி காலத்தில் தன்னுல் வெட்டப்பட்ட முண்டங்களை மீண்டும் உயிர்ப்பித்தது.

இன்னும் இவைபோல் வன பலவுள. விரிவஞ்சி நிறுத்தினம். இவைகளினின்றும் தமிழ் மொழி தெய்வத்தென்னுரை யென்பதைத் தவிர வேறு யாதோ ஊகிப்பது ? தெய்வத்திருமொழியின் மேன்மை யுணராது சோம்பி உண்பதும் உறங்குவதுமே தொழிலாய்த் திரியும் மந்தமதிகளின் இயற்கைதான் என்னே ! என்னே !!

தனி சிறப்பு இயல்புகள்.

தமிழ் மொழி தனிமொழியே யெனவும், வடமொழியோடு எட்டுணைச் சம்பந்தமு மில்லாமலே அது தனித்து இயங்கற்பால தென்றும், அதற்கான சான்றுகளையும் ஆராய்ச்சி வல்லுநரான தமிழ் மூதறிவாளர் கூறுவர். இஃது எவ்வாருயினும் இருக்கட்டும். வடமொழியின் சேர்க்கைத்துணை சிறிதளவு பெற்றதால் மட்டும் தமிழ் மொழியின் மேன்மைக்கு எதும் தீங்கு நேர்ந்து விடாதென்றே நாம் கருதுகிறோம். கூடியவரையில் தமிழ்மொழியே பெரும்பான்மையதாக இருக்குமாயின் போதுமானது. ஆரணமொழி தமிழணங்கின் ஆய் இழையாய் விளங்குவதை மேதையோர் மறுக்க மாட்டார்.

இனி, 'தமிழ் மொழி' எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி யென்ற பாகுபாடுகளுடையது. இவற்றின்பாற்பட்ட ஒரு சில தனிச்சிறப்புகள், அதாவது, இதர பாஷைகள் எதற்குமே யில்லாத லட்சணங்கள் இம்மொழிக்கு உண்டு. எவ்வாற்றானும் வடமொழியோடு மட்டுமே இதற்கு சாம்யம் உண்டு. வேறு எப்பாஷைக்கும் கிடையாத நிகண்டு, இலக்கண சூத்திரவிதிகள் வடமொழிக்கும் தென் மொழிக்கும் மட்டுமே யுண்டு. தமிழுக்கேயான சிறப்பியல்புகளைச்சற்று இயம்புவாம். எழுத்துவகையில் முன்ன

ரே கூறியவிதம் தன் பெயருக்கெற்ப 'ழ' ஏன்னும் அழகிய சொல்லைப் பெற்றது. பின்னும், ற, ன, எ, ஒ என்ற எழுத்துக் களும் சிறப்பாகத் தமிழுக்கே உரியனவாம். சொல்லோ, ஏனைய பாஷைகளின் தன்மையை முற்றிலும் பெற்றிருப்பதோடு அவற்று க்கில்லாத 'ஒட்டுச் சொற்கள்' என்ற சிறப்பிலக்கணம் வாய்த்த வை. அதாவது, பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை சந்திவிகாரம் என்ற ஆறு உறுப்புக்களும் ஒன்றோ டொன்று ஒட்டியே வரு மல்லது திரிந்தாவது, கெட்டாவது, விகாரப்பட்டாவது வாரா என் பதாம். மற்ற பாஷைகளில் ஒரு சொல்லடியின் நிமித்தம் வந்த சொல்லுருபுகள் சேர்க்கப்படுவதற்குப் பதில் வேறு சொல்லாயும், அச்சொல்லினடியாகத் தான் பிறந்ததோ என்ற ஐயத்தைத் தரும் வண்ணமும் வரும். தவிர, சொல்லின் பொருள் காரணமாக வின்றி முடிபையே கருத்திற்கொண்டு வடநூலார் பால் கூறுவர். வடமொழியில் பால் மூன்றேயாகத் தமிழுக்கோ ஐந்துபால்கள் உள. மேலும், தமிழ் மொழியின்கண் சொல்லும் பொருளும் எஞ் ஞான்றும் தழுவியே வருவன. அர்த்தமடியாகவே இடம், காலம், திணை, பால் முதலிய மாறுபாடுகள் உண்டாவன. இறுதியாக, மற் றுமோர் தனி இயல்பை நம் தமிழ் மொழி கொண்டுள்ளது. அஃ தாவது, இதர பாஷைகளுக்கில்லாத அகப்பொருள் இலக்கணம், புறப்பொருள் இலக்கணம் என இருவகைத்தாய பொருளிலக்கண மும் சேர ஐவகை இலக்கணமுடையது என்பதாம்.

முடிவுரை.

ஆகவே, "ஓசை பெற்றுயர் பாற்கடலுற் றொருபூசை முற்றவு நக்குபு புக்கென, ஆசைபற்றி" ஒருவாறு சிற்றறிவிற் கெட்டிய வரை, தமிழ்மொழிப் பெருமை அறையத்தொடங்கிப் புகுந்த யான் ஏற்கனவே கட்டுரையை மிகவும் விரிவாக்கி விட்டதாய் அஞ்சுகி றேன். இருந்தாலும், தமிழின் பெருமை அளவுக்கடங்காதிருப்பதை இச்சிறு வியாசத்திற்குள் ஒரு சிறிதேனும் அமைத்து வரைந்து விட முடிந்தது குறித்து மிகவும் மனமகிழ்வெய்துகிறேன். இனி முடி வாக, தமிழ்நலம் முன்னேறுவதற்கான சிற்சில யோசனைகளைக் கூறு தலோடும் இவ்விஷயததை இனிது முடிப்போமாக.

1. தமிழகத்தே பிறந்த ஒவ்வொருவரிடையும் 'தமிழ் தெய் வீகம் பொருந்திய நம் தாய்ப்பாஷையாகும்' என்ற கௌரவபுத்தி

ஏற்படுமாறு செய்யவல்லதொரு பெருங்கிளர்ச்சி நாடெங்கும் பரப்பப் படவேண்டும். தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் இத்தகைய இயக்கம் பரவ இடமுண்டு.

2. நாடெங்கும் தமிழ் முன்னேற்றத்திற்கெனப் பாடுபடுவதான வாசக சாலைகள் ஆயிரக்கணக்கில் ஏற்படவேண்டும். அவைகளில் செந்தமிழ் நூல்கள் யாவும் படித்தறிய விழைவாருக்கு எளிதில் கிடைக்கலாகும் சாதகம் அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் தமிழ்ப் பெருமையை வெளியிடுவதான சொற்பொழிவுகள் அடிக்கடி தமிழறிஞரால் அங்கு நிகழ்த்தப்பட வேண்டும். ஒவ்வொரு வாசகசாலையும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட இடத்தைத் தமிழ் மயமாக்கப் பெரும் பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. பண்டைய அரும் பெரும் தமிழ் நூல்கள் கிடைப்பன வற்றைப் புதுப்பித்து அச்சியற்றி நாடு முழுதும் பரப்ப, சீரிய செல்வமும் செல்வாக்குமுள்ள கனவான்கள் பலர் முன்வரவேண்டும். தமிழ்ப் புனருத்தாரண விஷயத்தில் தமிழ் ஆராய்ச்சி வல்லுநர் பலரும் மிகவும் மன மகிழ்ச்சியோடும் ஈடுபடுவதற்கான வழியில் அவர்கள் போற்றி ஆதரிக்கப்படவேண்டும். கற்றோரேயன்றி மற்றைய பாமரரும் மிகவும் சுலபமாய் அறிந்து கொள்ளத் தக்க வகையில் செந்தமிழ் உயரிய கிரந்தங்களைத் தெளிவான இனிய தமிழ் நடையில் எழுதி அவர்கள் வெளியிடவேண்டும்.

4. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கிணங்க பிறதேசப் பிற பஷைகளிலுள்ள பல திறத்தத சாரமான கிரந்தங்களை தமிழில் மொழி பெயர்த்து தமிழ் மொழி நூல்களின் எண்ணிக்கையை மேன்மேலும் விருத்தி செய்வதற்கு மேதையர் பலர் முன் வரல் வேண்டும். இத்தகைய மொழி பெயர்ப்பு நூல்கள் தமிழ் மொழிக்கு அணிகலன்களாம்.

5. தமிழ்ச் சங்கங்கள் நாட்டின் நாலு பக்கங்களிலும் நிறுவப்பட்டு பரீட்சைகள் மூலம் உண்மையில் தமிழ்ப் புலமை காட்டுவார்க்கு உயர்ந்த வெகுமதிகள் யோக்கியதா பத்திரங்கள் வருடா வருடம் அளிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட விஷயங்களைக் குறித்து சுயமாக உண்மையில் சிறந்த நீண்ட நூல்களும் சிறு கட்

டுரைகளும் நற்றமிழ் நடையில் எழுதி உதவுவாருக்கும் அடிக்கடி வெகுமானம் தந்து ஊக்கப்படுத்த வேண்டும். இது பொதுவான போட்டிக்கான சாதகமளிப்பதால் எளிதில் நிறைவேற்றிக் கொள்ள லாவதாகும். இது வழியே பலபடியாகவுமுள்ள அருமையான தமிழ்க் கிரந்தங்கள் ஏற்பட சந்தர்ப்பம் உண்டாகிறது. இதனுள், சன்மார்க்கபோதனை அனுபவமாய் உள்ளடக்கி வெளியிடும் கதாரூபமாய் சுயமே அமைக்கப்பட்ட நூல்களும் அடங்கு மென்க.

6. வடமொழிக்கும் தென்மொழிக்கும் பிராதான்யம் அளிக்கப்பட்டு அவை ஒருசேரப் பயிலுவதற்கான கட்டாயவிதி கலாசாலைத் திட்டங்களில் ஆரம்ப வகுப்பு முதல் இறுதிவரை அமைக்கப்பட வேண்டும். ஆங்கிலம் ஒத்த அந்நிய பாஷைகள் பயிலுவதற்கு இஷ்டத்தைப் பொருத்த விதி யிருக்க வேண்டும். உண்மையில் அறிவை வளர்த்து நாட்டினிடமும், தாய்ப்பாஷையினிடத்தும் மட்டற்ற அபிமானத்தை நம் இளைஞர் மனதில் வேரூன்றித் தழைத்து வளரச் செய்வதான சிறந்த நூல்கள் வகுப்பிற்குத் தகுந்தவாறு கட்டாய பாடமாக ஏற்படுத்த வேண்டும். தமக்குத் தாமே பலவகை விஷயங்களைக் குறித்தும் ஆழ்ந்து யோசிக்கும் ஆற்றல் நம் சிறுர்களிடை அமையவேண்டும். இன்று இளைஞராயிருப் போரே நாளை பெரிய மனிதராகும் போது நாட்டு நலத்தைப் பெரிதும் முன்னேறச் செய்வோராவர் என்பதை நாம் உன்னிப் பார்க்க வேண்டும். இது விஷயமாக, கல்வியிலாகா அதிகாரிகள் தகுந்த முறைகளை உடனே கையாளவேண்டும். ஏற்கனவே சமீபத்தில் ஒரு சிறிது இவ்வழியில் செய்யப்பட்டிருப்பது மேன்மேலும் கிரமமால் அதிகரித்திடுவதற்கான பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

7. தமிழகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் ஆங்கிலங் கலவாத சுத்தமான தமிழிலேயே பேசப்பயில வேண்டும்.

இவ்வளவோடு, இவ்வியாசத்தை இனிது முடிக்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கான இன்னருள் பாலிப்பனாக! ஓம் தத்ஸத்.

'நன்மை கடைப்பிடி ;
'தீவினை அகற்று.'

கண்ணப்பநாயனார் சரிதை

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை எழுதியது.

கலி வெண்பா.

பூவாரும் வாவிசூழ் பொத்தப்பி நன்னாட்டின்
மேவுமுடுப் பூரில் விறலெயினர்—கோவான
நாகனென்பா னவ்வூரைத் தத்தையெனு நங்கையொடு
ஆகமுயி ரென்னவைகி யாளுநாட்—போக மெலா
மெய்திப் புதல்வ ரிலாமையினாற் றங்கள்குல
தெய்வமெனஞ் செவ்வேளைச் சிந்தித்துத்—துய்யவெள்ளை
வாரணத்தின் சேவல் மயிற்றொகுதியும் விடுத்து
கூரயிலார் முன்னர் குரவைவையெனும்—பேரிலகு
ஆடன் முதலா மநேகவிழா வாற்றியபின்
கோடுயிருங் குற் றெறிந்த கொற்றவனார்—நீரடருளால்
குன்றவர்க டங்கள் குலம் விளங்கத் தந்தைவயின்
துன்று கருக்குறிக டோன்றுதலும்—வென்றிமிக்க
நாக னுணர்ந்து வெறியாட் டொடுநலஞ்சேர்
ஓகைபெறு மெண்ணில் பலியுதவித்—தோகையன்ன
காரிகையா டத்தை மதிகள் கழிந்த பின்றை
வாரிதிவெண் டிங்கள் வழங்கிய போல்—சீரிலகு
மைந்தன் பயந்த மகிழ்ச்சியினா லவ்வேடர்
தந்தைக் குரைக்கவவன் றான் படர்ந்து—சிந்தைகளி
கூரக் கரியவரை காணமுகில் கொண்டதென
ஆரப் புயத்தோ டெடுத்தணைத்துப்—பாரமிகுந்
தெண்ணுங் கனமா யிருப்பதினா லென்சுதற்குத்
திண்ண னெனுநாமஞ் செப்புமெனப்—புண்ணியத்தால்
வந்துதித்த மைந்தனுக்குஅப்பெயரை வைத்தழைத்துக்
கந்தக் கடவுளருட் காப்பணிந்து—விந்தையுற
வேங்கையுகிர்ச் சுட்டிமுதன் மிக்க பலகலனும்
பாங்கு பெறச் சாத்திப் பல பருவம்—நீங்கியபின்
திண்ணன் சிறுதே ருருட்டித் தெருவினிடை
நண்ணிவிளை யாட்டயரு நாளதனிற்—கண்ணையிமை

காப்பதென வன்னையுடனத்தனுநற் காதலுடன்
மாப்புலியே றென்னவளர்ந் தையாண்டு—ஏர்படவே
குறச்சிறுவர் சூழக் கொடுங்கானிற் போந்து
மறப்புலியின் குட்டடிவரா கத்தின்—நிறற்குருளை
தாவு முயற்பறிழி ஞேடுவெளவித் தங்கண் முன்றின்
மேவுதரு வீக்கி மிகுமன்பா—யாவலுடன்
போற்றி வளர்த்துவரும் போது சிலைத் தொழிலை
ஏற்றமுறக் கற்று முதிர்ந் தெய்தியபின்—வேற்றுவகை
மற்றைப் படைப் பயிற்சி கற்று வளர்மதிபோல்
அற்றமிலார்க் காயுள்பதினுறுகி—வெற்றிமிக
வைகி வருங்காலை மன்னுதந்தை நாகனுக்கு
மெல்வலிமை குன்றி மிகத்தளர்ந்து—செய்யுமடல்
விற்போரியற்ற விறலிலனுய் மூப்படைந்தான்
பிற்காலை வேங்கை பெருஞ்சீய—முற்றமரை
ஏனங் கரடி யிவைமுதல மாக்க ளெலாம்
கானமெங்கும் பல்கியுள காரணத்தான்—மானசிலை
வேடர் திரண்டு தங்கள் வேந்தன் மருங்கணைந்து
கூடு விலங்கின் கொடுமைசொல—நாட்டிக் கேட்
டென்ன வினிவேட்ட மாடவிய லாதுமகன்
றன்னை யுமக்குத் தலைவனென—மன்னுமன்பா
லின்று தொடக்க மெனதுரிமை யீந்தனனல்
துன்று மெயினரெலாஞ் சூழ்ந்து சென்று—நன்றியுடன்
கூட்டிக் கொடுபோய்க் கொடுங்கானகத்தடைந்து
நாட்டு கன்னி வேட்டை நடாத்து மென—வீட்டமுள
வேடர் திண்ணனரை விறல்வேந் தெனமதித்து
நாடியவர் முன்போய் நவிலுதலும்—பீடுடையார்
வில்லம்புடைவாள் விறன்மிகுவீரக்கழலும்
வெல்லும் பதத்தில் விளங்கவே—அவ்வனையார்
இவ்விதமாய்ப் போர்க்கோல மெய்தியன்னர் தங்களொடு
பௌவமெனக் காட்டிற் பரந்துபோய்—எவ்வமின்றி
வாழும் வனவிலங்கு யாவும் மறிந்துவிழப்
போழும் பகழி மழைபொழிந்து—காழெயினர்
தங்களொடு சேர்ந்து தனிவேட்டை யாடியவர்
அங்கு பலமிருக மட்டிடும்போ—தெங்குமிலா

கண்ணப்ப நாயனார் சரிதை

நன்றியுள வயவர் நாணனொடு காடனெனுந்
துன்னு மிருவர் தொடர்ந்து வந்தார்—குன்றியன்ன
வெங்கண் வராகம் வலைகிழிய மேற்பாய்ந்து
அங்கணிருந்தோடி யகன்றுபோய்—மங்குல்படி
குன்றத் தடியிற் குலவு தருச்சூழல்
சென்றங்கு நின்று தெருமாலும்—வென்றிமிகு
திண்ணனார் தன்கைத் தெறுகணையாற் கோறல்செய
எண்ணாது வாளா லெறிந்தனரால்—அண்ணலவர்
ஏதிகொண்டு குத்த விருதுணிபட் டுக்கிடந்த
ஓதுமே னங்கண் டுறுநாணன்—ஆதரவாய்க்
காடன் றனைவிளித்துக் காதம் பலகடந்து
ஏடா மிகவு மிளைத்திட்டேம்—ஆடவனைக்
கிட்டிநாமுத்தரவு கேட்போ மெனப் பணிந்து
பட்ட மகிபா பகரக்கேள்—அட்டிறந்த
பன்றி தனைச் சுட்டுண்டு தண்ணீர் பருகியெமைத்
துன்று பசியைத் தொலைத்து விட்டுச்—சென்றிடு வோம்
காட்டுக் கென மொழியக் கேட்டுக் கழற்குமரன்
வேட்டநீ ரிங்குளதோ விள்ளு மெனப்—பூட்டுதனு
வீராவித் தேக்க மரத்தயலே வெற்பினுக்கு
ஓரமதிற் பொன் முகலி யோடுதெனத்—தீரன் கேட்
டக்கரைக்குக் கேழல் கொடுவருவீ ரென்றறைந்து
பக்கமதிற்றானும் படர்ந்தனராற்—றொக்கங்கே
போந்தபின்ன ராண்டே பொருப் பொன்று தோன்றும்
சேந்தவிழியாய் நாங்கள் சேறுமென—நாந்தகமார்
கையாயங் கேகினல்ல காட்சிதனைக் கண்டதின் மேல்
கொய்த புஷ்பஞ் சூடுகுடு மித்தேவர்—வைகிடுவார்
கும்பிடலா மென்று குறநாணன் கூறுதலும்
நம்பனடி யார்விரைந்து நண்ணவே—தும்பியன்ன
அங்கத்தின் பார மகலுதல்கண்டாசைமல்கி
எங்குளா ரக்குடுமித் தேவரென்று—பொங்குமன்பா
லேகவன்னார் பன்றி யெடுத்து விரைந்து சென்று
மாகர்திளை பொன்முகலி வந்தடைந்தார்—ஓகையொடு
அக்கரையின் பாங்கோ ரணிநிழலிற் கேழலிட்டுப்
பக்கமுறு காடன் றனைப்பார்த்து—இக்கணத்திற்
றீக்கடைகோல் பண்ணித் திகழனலைக் காண்பாய் நாம்

மீக்கொண்மகிழ் வோடுமலை மீதேறி—ஊக்கமதாய்க்
கண்டு வருவோ மெனக் கழறி நாணனொடு
விண்டு வளர்வரையின் மேற் போந்து—தொண்டனார்
மாக முயர்திருக்கா ளத்திமலை மாமருந்தா
மேகரைக்கண்டேயெழுந்த பேருவகை—மோகமதான்
முன்னோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்
என்னே யிவரகப்பட்டா ரெனக்கு—முன்னாளிற்
செய்த தவத்தினா லென்றுசெப்பித் தேகமெலா
மொய்மயிர் சிலிர்க்க மொழிகுழறி—மைவிழியா
லாற்றருவி யென்ன வருநீர் பொழிதரவே
சீற்றமுள வேடர்கள்போற் றேவரீர்—நாற்றிசையும்
யானை கரடி யடல்வேங்கை சூழ்கானில்
ஏனோ தனியே யிருக்கின்றீர்—தேனனைய
வெம்பெருமானேயென் றிரங்கிநைந்து கையிலுள
வெம்புதனு கீழை விழுந்ததையு—நம்பியவர்
தோராராய்ப் பச்சிலைபூச் சீதநீ ரும்வார்த்து
யாரோ புரிந்தா ரெனவினவச்—சீருடனே
உந்தையுட னேர்ஞான்று வந்தபொழுதோர் பார்ப்பான்
சிந்துபுன லூற்றித் திகழிலைபூ—அந்தமுறச்
சூட்டி யெதிர் நின்று துதி செய்து போனானென்
நீட்டமுள நாணனியம் புதலுங்—கேட்டடியார்
நாதனைவிட்டுப் பிரியேனானாலு நம்பருக்குக்
கோதி விறைச்சி கொடுப்பாருமில்லை—யாதலினால்
நானே யிறைச்சி கொண்டு நண்ணுவே னென்ன மொழிந்
தேனத் தசையை யெடுத்துவர—மானெனவே
யேகுவார் மீள்வாரிளங்கன்றினைப் பிரிந்து
போரும் புனிற்றாப்போற் புந்திநொந்து—வேகமொடு
போய்வருவ தற்குத்துணிந்து புறப்படமுன்
காய்சிலையைக் கைக்கொண்டு கண்ணுதலைத்—தூய்மையுள
சொல்லா லநேக துதிகூறப் போயினார்
வில்லாரு நாணனொடு வெற்பிழிந்து—அல்லிமலர்க்

(தொடரும்.)

ஸ்ரீ ஹர்ஷ சரிதம்

ஸ்ரீமான் ச. செல்லம் எழுதியது.

அரசேற்றல் (5)

மானவ நாட்டு மன்னவனேடு போர் செய்யச் சென்ற தண்டி திரும்பி வந்தான். அவனுல் ராஜியஸ்ரீ மாலவ நாட்டு மன்னவன் சிறையில் இல்லை யென்றும் அங்கிருந்து வெளியேறி விட்டதாகவும் தெரியவந்தது. ராஜியஸ்ரீ விந்தியாரண்ணியத்தில் இருப்பதாக பின் ஊகிக்கப்பட்டது. ஹர்ஷன் சசாங்கனேடு சண்டை செய்யத் தண்டியைச் சுமதலைப் படுத்திய பிறகு ஹர்ஷன் தன் தங்கையைத் தேட விந்தியாரண்ணியத்திற்குப் போகவேண்டிய ஏற்பாடுகளை செய்தார். தண்டியால் கொண்டு வரப்பட்ட மாளவ சேனைகளின் பரிசோதனைக்குப் பிறகு சில குதிரைப் படைகளோடு விந்தியாரண்யத்திற்கு பிரயாணமானுர். விந்தியாரண்ணியஞ் சேர்ந்ததும் அங்கே ஓரிடத்தை உறையுள்ளாக்கி மலம் புதர்களிலும், மரங்கள் நிறைந்த பொதும்பர்களிலும், காந்தள் மலர்ந்த நறு நீர்ச்சுனைகளிலும் வெள்ளிய அருவி வீழ் தண்ணீர் கயத்திலும், வேடுவருறையும் சிறு குறுச்சிகளிலும், தபோதனர் வாழ்கின்ற பர்ண சாலைகளிலும் படை வீரரும் உளவறிவோரும் தேடித்திரிந்தனர். தன் தங்கையைக் காணுததினுல் ஹர்ஷர் பெருந்துன்பத்தைக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே ஒரு வேட்டுவ வரசனைக் கண்டார். அவரிடம் ராஜியஸ்ரீ யைப்பற்றி வினவியபோது அக்காட்டில் வாழ் திவாகர மித்திரன் என்ற பௌத்த சன்னியாசியை வினவினுல் தெரியு மென்று பதிலளித்தார். உடனே திவாகர மித்திரன் வாழிடஞ் சென்றனர். அவர் ஒரு பெரிய தவசி. அவருக்கு அனேக சீடர்களுண்டு. ஹர்ஷருடைய வருகையைக் கண்டதும் முனிவர் முகம் மலர்ந்து வரவேற்ருர். ஹர்ஷர் தன் தங்கையைத் தேடி திரிவதாய் கூறி, கண்டதுண்டாவென வினவினர். ராஜியஸ்ரீயின் வயது முதலிய இலக்கணங்களை முனிவர் கேட்டறிந்து கொண்டு அப் பெண்மணியை இரண்டொரு தினங்களாக நாங்கள் கண்டதுண்டெனக் கூறினுர். அவர் சிஷ்ய கூட்டத்திலுள்ள ஒருவர்

ஆத்திரம் பொங்க அம்மாது எரிமூழ்கப் போவதாய் யானறிந்தே னென்றான். எவ்விடத்திலென்று ஹர்ஷர் ஆத்திரமும் துக்கமும் ஒருங்கு சேரக் கேட்டார். வடபாரிசத்திலுள்ள அருவிக்கரையில் விறகு குவித்திருக்கிறது. நாளை வையறையில் தீப்பாய்வதாய் எண்ணம் போலும் என்றான். இதைக்கேட்ட ஹர்ஷன் முனி சீடர்களைக் கூட்டிக் கொண்டு தன் படைகளோடு அருவிக்கரையை விரைந்து ஓடினர். அவ்விரவை, அருவிக்கரையில் யாவரும் கழித் தார்கள். வையறையை எதிர்பார்த்திருந்தார்கள். அருணனொளி கீழ்வானில் தோன்றியபோது ராஜியஸ்ரீயை மங்கல கோலத்தோடு வருவது கண்டனர். முகமலர்ச்சியோடு தீயண்டை வருந்தங்கை யை மனம் பதறி அடங்காதவனாக பிடித்துக்கொண்டனர். தங் கையைக்கண்டு சந்தோஷங்கொண்டு கங்கைக்கரையிலுறையும் சேனைகளையும் திருப்பி நாடு வந்து சேர்ந்தான்.

ராஜியஸ்ரீ திவாகரமித்திரனுக்கு சிஷ்யப்பட்டு காயாஷம் வாங்கி விந்தியாரண்ய ஆசிரமத்திலேயே இருப்பதற்கு எண்ண முள்ளவளாக விருந்தாள். தன் அருமைத் தங்கையை பிரிந்திருக்கப் பிரிய மில்லாதவரான ஹர்ஷர் தன் தமயனைக் கொன்றவனைக் கொல்லுவேன் என்ற சாபத்தை முடித்துவிட்டு தானும் அவளோடு சன்னியாசஞ் செய்வதென்ற தீருமானத்தோடு தவசிரேட்டராகிய திவாகர மித்திரனை, தன்னோடு நகரத்திற்கு அழைத்துச்சென்றார். ஹர்ஷருடைய சில வாக்குகளாலும் மேலுள்ள ஒழுக்க வரலாறு களாலும் துறவறத்தைக் கொண்டே ஒழுகியிருந்ததாகத் தெரிகி றது. இதனால் ஹர்ஷர் இல்லறத்தில் ஈடுபடவில்லை யென்றே கூற வேண்டும். இல்லறத்தை வெறுத்து துறவறத்தை மேற்கொண்டி ருந்தானென்பதற்கும் நம்பத்தகுந்த ஆதாரங்களில்லை. பாணசரி தத்தால் ராஜியவர்த்தனனுடைய சாவிற்கு முன்பே இல்லறத்தில் ஈடுபட்டிருந்தாரெனத் தெரிகிறது. தந்தையினுடையவும் தமய னுடையவும் மரணத்திற்குப் பிறகு ஒரே தங்கையுஞ் சன்னியாசங் கொள்ளப்போவதால் இல்லறத்தை வெறுத்து விட்டாரென்று கூறலாம். பொதுவே துறவறங்கொண்டு வாழ்ந்தாரென்று ஒரு முடிவிற்கு வரல் எளிது.

ஹர்ஷர் நாடாள முன் வரவில்லை. தன் தமையனைக் கொன்றவர்களைக் கொன்று விட்டு, தான் சன்னியாசங் கொள்வ தென்ற உறுதியோடு இருந்தார். அப்பொழுது நாட்டில் அரசரை

அரச குலத்தவராக வேறு ஒருவருமில்லாததால் ஜனங்கள் தியங்கினார்கள். பலவந்தமாக ஹர்ஷனை அரசேற்க வேண்டினார்கள். தன் குடிகளின் நன்மையைக் கருதும் கோமான் அதை மறுக்க முடியுமா? இதைப்பற்றி பாணனுடைய கூற்று வருமாறு:—
"நீயே எல்லா வுறுப்புகளும் அரசனைப்போல அமையப் பெற்றிருக்கிறாய், நாட்டுச் செல்வியும் உன் இளமையையே விரும்புகிறாள்." என்று நிச்சயமற்ற சிங்காசனத்தில் ஹர்ஷனை வலுவாக ஏற்றினார்கள். இதைப்பற்றி யுவாங்சுவானும் "பிரபாகரவர்த்தனனும் ராஜியவர்த்தனனும் மாண்டதின் பிறகு நாட்டில் அரசர்களில்லாது அநீதி பொங்கி செல்வம் குன்றியது. முதல் மந்திரியாகிய தண்டி நாட்டின் நிலையையும் மன்னர் ஒருவரின் தேவையையும் எடுத்துச் சொல்லி ஹர்ஷரை அரசேற்க வற்புறுத்தினார்." என்று கூறுகிறார். ஹர்ஷர் அதற்கு அது துன்பமும் பொறுப்புமுடைய வேலை யென்றும் அதை யேற்றுக்கொள்ள தனக்கு ஆற்றலில்லையென்றும் மறுத்தார். பின் ஜனங்களுடைய விடாப்பிடியால் ஒரு வாறு சம்மதங்கொண்டார், கங்கைக்கரைக்குச் சென்று அவலோகிதபோதிசத்துவனுடைய உருவத்தை வணங்கி தன் முன்னோரின் மரணத்தையும் தான் நாடாள வேண்டிய ஆவசியத்தையும் கூறினார். "நீ முற்பிறப்பில் இவ்வனத்திலொரு பிக்ஷுவாக விருந்தாய். அத்தவப் பயனால் அரசனானாய். நீ அரசேற்றவுடன் புத்தமதத்திற்கு போதிய உதவி செய்யவேண்டும். ஆனால் அரியாசனமேறி முடி சூடவோ விருதுகள் தாங்கவோ கூடாதென்று" சொல்லி அவர் மறைந்தார்.

இதை அவ்வளவு உண்மையாக நம்ப முடியவில்லை. தன் மதப் பற்றால் யுவாங்சுவான் இக்கதையை நிருமித்தானோ வென்று சொல்ல வேண்டியதிருக்கிறது. போதிசத்துவனுடைய சொல்லைப்போல ஹர்ஷன் விருதுக்களை யேற்காமலில்லை. "பரமபட்டாரகன், மஹா ராஜாதிராஜன்," எனும் விருதுகளைக் கொண்டிருந்தான். ஹர்ஷருடைய தங்கையின் கணவன் மாண்டதின் பிறகு அவன் நாட்டவராகிய கனியாகுபிஜத்துவர் தன் தங்கைக்கு கனியாகுபிஜத்தை ஆண்டுகொள்ள வேண்டிக் கொண்டனரென்றும் அதற்காகத்தான் ஹர்ஷர் மறுத்தாரென்றும் போதி ஸத்துவனுடைய உத்தரவை அதற்காகத்தான் பெறப்போனாரென்றும் சிலர் கூறுப. எங்ஙனமாயினும் ஜனங்களுடைய வற்புறுத்தலினாலேயே ஹர்ஷர் அரசேற்றாரென நன்கு விளங்குகிறது.

தன் தமையனைக் கொன்றவனைப் பழி வாங்கிய பின்னரே மகுட மணியவேண்டுமென்று எண்ணியிருந்தாரெனினும் அதன் பிறகும் மகுடமணிந்ததாகத் தெரியவில்லை. ஆகவே தந்தையினுடையவும் தமயனுடையவும் மரணத்தாலும் சகோதரியின் வைதவ்வியத்தினாலும் வருந்தி நாட்டையும் வாழ்வையும் வெறுத்திருக்கும் போது ஜனங்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்கி நாடாள வேண்டியது தமது கடமையெனக் கண்டே அரசேற்க இசைந்தார். துறவறங் கொண்டு அரசாண்டு வந்தாரெனில் அரசேற்றலில் அவருக்கு இருந்த விருப்பம் வெளியாகிறதல்லவா? தங்கையும் தமையனும் சன்னியாசங் கொண்டிருந்தனர். தன் தமயனைக் கொன்றவரைப் பழிவாங்கப் போகும் போது தன் தங்கையை போதிஸத்துவனிடம் ஒப்புவித்து கூறியது காண்க. "நான் தந்தையின் பிரிவால் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் குடிகளை ஆசுவாசப்படுத்தும் வரையில் இவளை நீங்கள் தருமக்கதைகளைக் கொண்டும் க்ஷேமகரமான போதனைகளைக் கொண்டும் நல்ல உபதேசங்களைக்கொண்டும் துக்கத்தை யில்லாமல் செய்வதற்கு காரணபூதமான ஒவ்வொரு காட்சிகளைக்கொண்டும் போதிக்க வேண்டுகிறேன். என் விரதங் கழிந்த பின் இவளோடு நானும் சன்னியாசங் கொள்ளுவேன்". என்று கூறினார். இதனால் ஹர்ஷருடை அரசேற்றலிலுள்ள விருப்பமும் தங்கைபாலுள்ள சினேகமும் வெளியாகின்றன.

(தொடரும்)

ஆர்கைல்ஷயரைச் சேர்ந்த கேபிள் டவுனில் வசிக்கும் ஒரு அம்பட்டன் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு காரணத்தை முன்னிட்டு இனி பெண்களுக்கு மயிர் கத்தரிப்பதில்லை என்று உறுதி கொண்டிருக்கின்றான்.

* * *

மிடில் பரோவிலுள்ள ஒரு தோட்டக்காரன் தன் தோட்டத்திலுள்ள முட்டைக்கோசு ஒன்றை அறுத்துக்கொண்டு போகும் போது ஒரு இதழுக்குள் ஐந்து பவுன் பாங்கி நோட்டு ஒன்றிருக்கக் கண்டான். அத்தோட்டம் ரஸ்தாவை யொட்டியிருப்பதனால் வழியில் யாராவது அந்த நோட்டைத் தவற விட்டிருந்து அது காற்றிலடித்துக் கொண்டு போய் இதழுக்குள் சிக்கிக்கொண்டிருக்கக் கூடுமெனக் கருதுகின்றனர்.

கடோரசித்தன் கதை

ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. எழுதியது.

(150-ம் பக்கத் தொடர்ச்சி)

"மிக்க வந்தனம்; இப்போது சொன்னீர்களே அவ்வுறுதி மொழி போதும்; நான் இந்த இருளுலகத்தைக் கடந்து என்னுடைய பழைய உடலிற் புகுவேனுல் உங்களை நம்பலாம் அல்லவா? கள்வர்களுக்குள் கட்டுப்பாடு உண்டல்லவா? நீங்கள் எங்கள் குல தெய்வமல்லவா? என்ன சொல்லுகிறீர்கள்" என உசாவினன் கடோரசித்தன். அதற்குச் சங்கிலிக்கறுப்பன் "நீ இவ்விருளுலகந் தாண்டி உன் உடலிற் புகுந்து வேண்டிய வரத்தைக் கேள்; அப்போது என்னை நம்பு; இப்போது பேசுவது வீண் பேச்சு" என்றனன். பின்னும், கடோரசித்தன் "அடிமை! புத்தி! ஆனல் இன்னும் ஒரு சந்தேகம். நான் எப்படியாவது என் உடலிற் புகுந்து கொள்ளுகின்றேன் என வைத்துக் கொள்ளுவோம். நான் உங்களை வேண்ட, பின்பு நீங்கள் சென்று பெருமாளை வேண்ட. அதற்கெல்லாம் நாழிகையாகுமே; அதற்குள் நமனர் என்னை மறுபடியும் இங்கு இழுத்து வந்து விடுவாரே. அதற்கென்ன செய்வது!" என்ருன். அதற்குச் சங்கிலிக்கறுப்பன் "அன்ப! நீ என்ன மனக் கோட்டை கட்டுகின்ருய். இவ்விருளுலகத்தையாவது நீயாவது கடந்தாவது செல்வதாவது? இது சுத்த மதிஹீனம். சீ சீ சீ! நீ சுத்த முட்டாள். 'செத்தவன் பிழைப்பானு' என்னும் பழமொழி கூட உனக்குத் தெரியாதா?" என்றனன். "ஹா! ஹா! இப்போது தான் நீங்கள் எனக்கு உண்மை நண்பர் எனக் கண்டேன். உண்மை நண்பர் தாம் இவ்வாறு இடித்து நல்லுரை கூறுவார். மனக் கோட்டையோ! மணற்கோட்டையோ! இன்றிரவு என் சொந்த வீட்டில் தான் எனக்குச் சாப்பாடு; பாருங்கள் இதன் உண்மையை" என்றனன் கடோரசித்தன். அதற்குச் சங்கிலிக் கறுப்பன் "நீ இப்போது சொன்னது உண்மையானல் நீ உன் பழைய உடலிற் புகுந்து, உணவு உண்டு, உண்மையாகவே ஊனும் உயிருமாய் இருக்கின்ருேம் எனத் தேர்ந்தவுடன் "சங்கிலிக் கறுப்பா" என என்னை மும்முறை கூவுக. காலன் உன்னை மறு

படியுந் தேடி வருமுன் நான் உனக்குப் பெருமாளிடம் வரம் வாங்கித் தருகின்றேன் ; பார் '' என்றனன். " மெத்த சரி'; என்றனன் கடோர சித்தன். சங்கிலிக் கறுப்பனும் தனது மனதுக்குள் " ஹா! இவன் சரியான பேர்வழி ; இவன் இருக்கும் இடமெலாம் கிளர்ச்சியே'' எனச் சொல்லிக் கொண்டே வழி நடந்தனன். இருவரும் யமதருமராஜர் வீற்றிருக்கும் நரகலோகம் வந்து சேர்ந்தனர். நரக லோகத்தைச் சுற்றி ஒரு பெரிய ஆறு ஒன்பது சுற்ருக ஓடுகின்றது. அந்த ஆற்றைக் கடந்து சென்ருல் தான் யமபட்டணம். அந்த ஆற்றங்கரையிற் கடோரசித்தனுடைய உயிரை விட்டு விட்டுச் சங்கிலிக் கறுப்பன் போய் விட்டான். போகும் போது " இன்றிரவு! சொன்னது ஞாபகம் இருக்கட்டும்'' என்றனன் கடோரசித்தன். சங்கிலிக் கறுப்பன் சென்றதுங் கடோரசித்தன் அந்த ஆற்றங்கரையிலிருந்த படியே தோணிக்காரனைக் கூப்பிட்டான். " கொண்டுவா தோணியை இப்படி '' எனக் கூவினன். தோணிக்காரனும் " எங்கே என் கூலி ? எனக்குச் சேர வேண்டிய வாய்க்கரிசி சேர்ந்தால் தானே நான் உன்னை எனது தோணியில் ஏற்றுவேன் ; அது தெரியாதா உனக்கு?'' என்றனன். அதற்குக் கடோரசித்தன் " ஓஹோ! என்னிடம் லஞ்சம் கேட்கின்ருயா ? தகனமோ, புதையலோ செய்து கருமாந்தரம் செய்யப்பட்டவர்கள் அல்லவோ உனக்கு லஞ்சம் கொடுப்பவர்கள். வீடு இருந்தால் தானே, ஐயா, வீட்டுவரி ; நிலம் இருந்தால் தானே நில வரி ; அந்த மாதிரி, என்னைத் தகித்திருந்தால் அல்லது புதைத்திருந்தால் தானே உனக்குத் தகனவரி அல்லது புதையல்வரி கிடைக்கும். என்னை இடு காட்டில் இடவும் இல்லை; சுடுகாட்டிற் சுடவுமில்லை ; தகன மில்லை, புதையல் இல்லை, ஆதலால் நான் ஒன்று மில்லை ; 'ஒன்று மில்லை' என்பதற்கு வரி " ஒன்று மில்லை '' அடே! முட்டாள்! இந்தக் கணக்குக் கூட உனக்குத் தெரியவில்லையா ?'' என்றனன். இதைக் கேட்ட தோணிக்காரன் "ஒன்று மில்லை என்ருல் தூக்கிட்டுச் சாவு'' எனவைது கொண்டே வெறுந் தோணியை அப்புறம் ஒட்டிச் சென்ருன். அதற்குக் கடோரசித்தன் ' எனக்கு ஏது கழுத்து ? நான் தான் பைசாச ரூபமாயிருக்கிறேனே' உன் கழுத்தை இரவல் கொடு ; தூக்கிட்டுக் கொள்ளுகிறேன் ! என்றனன். இதைக் கேட்ட கடோரசித்தனைப் போலத்

தகன மின்றியும் புதையலின்றியும் கரையோரத்தில் நின்ற பைசாசங்கள் எல்லாம் ஒவென நகைத்தன.

காட்டு வழியிற் செல்லும்போது புலியடித்தும், பாம்பு கடித்தும் இறந்து பைசாசமாயின சில. கப்பல் கவிழ்ந்து கடலிடை வீழ்ந்து முழுகி இறந்து பைசாசமாயின சில. ரகசியமாகக் கொலையுண்டு கழுகுக்குங் காகத்துக்கும் உடலம் உணவாகிப் பைசாசமாயின சில. இவ்வண்ணம் பல்லாற்ருனும் தகிப்பாரின்றிப் புதைப்பா ரின்றி, ஆற்றைக் கடந்து செல்ல இயலாது ஆற்றங் கரையிலேயே வருடக் கணக்காய் நின்று காத்திருந்த பைசாசக் கூட்ட மெல்லாம் கடோர சித்தப் பேயின் வேடிக்கைப் பேச்சில் இன்புற்று ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தன. இந்தப்பேய்களின் பேரிரைச்சல் ஆற்றுக்கு அக் கரையில் யமதருமராஜரை வேலை செய்ய ஒட்டாது தடுத்தது. தருமராஜரும் கோபித்து "இஃதென்ன பேரிரைச்சலாயிருக்கிறதே ஆற்றுக்கு அக்கரையில் ?" என வினவினர். அப்போது அங்கிருந்த ஒரு தூதன் "சுவாமி! ஆற்றுக்கு அக்கரையில் உள்ள பேய்க் கூட்டங்களின் நடுவில் கண்ணபுரத்திலிருந்து கடோரசித்தப் பேய் எனும் ஒரு விருந்து வந்திருக்கிறது. அந்தப் புதுப்பேய் ஏதேதோ வேடிக்கையாகப் பேசி எல்லாப் பேய்களையுஞ் சிரிக்கச் செய்கிறது. தோணிக்காரனைக் கூடப் பரிகசித்து எளனஞ் செய்ய அவன் "எனக்கு இந்த வேலை போதும் போதும்; தருமராஜா இந்தப் புதுப் பேயின் கொழுப்பை அடக்காவிட்டால் இந்த ஓடத் துடுப்பை முறித் தெறிந்து வேலையையும் விட்டு விடுகிறேன்" எனக் கூறி அழுகின்ருன் என்றனன். அதற்கென்றேற்பட்ட வருடங்கள் கடந்த பிறகே இந்தப் பேய்க் கூட்டம் ஆற்றுக்கு இப்புறம் வரக் கூடுமாதலால், யமதருமராஜரே புறப்பட்டு ஆற்றுக்கு அப்புறம் போய்க் கடோரசித்தபேயை நோக்கி, 'எட மூட! உன் எளனப் பேச்சை நிறுத்து. நிறுத்தாவிடில் அதற்காக ஏற்பட்ட தண்டனைக்கு உள்ளாவாய், அறிதி'—என்றனர். அதற்குக் கள்ளன் கூறுகின்ருன்:—

'தருமராஜரே! தங்களுடைய தரும நூல் முறையைக் கூறுகிறேன்; பேய்களாகிய எங்களை விசாரணை செய்யாமல் எங்களுக் கென்றேற்பட்ட பிரமாண நாள் கழியும் வரை, தாங்கள் எங்களைத் தண்டிக்கமுடியாது. விசாரணை செய்ய வேண்டுமாஞல் இவ்வாற்

றைக் கடந்து தங்கள் பட்டணத்துக்கு நாங்கள் வந்த பிறகுதான் தாங்கள் எங்களை விசாரிக்கலாம். ஆற்றைக் கடக்க வேண்டுமென்றால் எங்கள் உடலம் புதைபட்டிருக்க வேண்டும்; அல்லது தகனமாயிருக்க வேண்டும். புதைபடாது போனதுந் தகன மாகாது போனதும் என் பிழையல்ல. என்னுடைய பொல்லா மனைவியின் கொடுமை. அவள் என் உடலத்துக்கு ஒரு கைங்கரியமுஞ் செய்ய மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கின்றாள். தாங்கள் என்பேயுருவை நீக்கிப் பூலோகத்துக்குச் செல்லும் வழி காட்டி என் உடலிற் புகும் ஆற்றலை எனக்குக் கொடுப்பீர்களானால், நான் அவளைப் பயமுறுத்தி உன் கடமையைச் செய், என் பிரேதத்தைப் புதை அல்லது தகனஞ் செய் என வெருட்டி அச்சுறுத்துவேன். அவளும் அங்ஙனமே செய்வாள். நானுந் தங்கள் பட்டணத்துக்குள் வர அருகனாவேன். தாங்கள் ஏற்படுத்தியுள்ள நீதிபதிகள் செய்யும் விசாரணைக்கு உட்படுவேன். நான் எவ்வளவு குற்ற மற்ற வாழ்க்கையைக் கொண்டிருந்தேன் என்பதையும் நிரூபிப்பேன்' எனக் கூறினன்.

தொடரும்

பூமியில் மிகக் குளிர்ச்சியான பாகம் வடசோளத்திலுள்ள சைபேரியா நாட்டிலிருக்கும் வெர்க்காயின்ஸ்க் என்னுமிடத்தில் தான். இங்கு 1885-ம் வருடத்தில் ஜீரோவுக்குக் கீழே 90.4 டிக்கிரி குளிர்ச்சி ஏற்பட்டிருந்தது.

***

கிரீனிச் நகரிலுள்ள ஒரு பிரபல இரும்பு வர்த்தகரின் தொழிற்சாலை முற்றத்தில் இரண்டு புறாக்கள் சேர்ந்து பழைய சிறு இருப்புத் தகடுகள் சைகிள் ஸ்போக் முதலான பலவகை உலோக வகைகளடங்கிய சாமான்களினாலே ஒரு கூட்டைக் கட்டியிருக்கின்றன. அக் கூட்டின் கனம் சுமார் 22 பவுன்களிருக்கின்றன.

***

இங்கிலாந்தில் சிகரேட் மிஷனைப் போன்ற முறையில் மற்றுமொரு நூதன இயந்திரம் செய்யப்பட்டிருக்கின்றது. அதில் பணத்தைப் போட்டு விட்டால், ஆஸ்பரின், அயோடின் முதலான சிறு மருந்து சீசாக்களும், காயத்திற்குக் கட்டும் துணி பஞ்சு முதலிய சிறு வைத்தியப் பொருள்களும் தானாகவெளியே கொண்டுவருகின்றன.

தேகாப்பியாசம்

(ஸ்ரீமான் பண்டித. பா. பக்கிரிசுவாமி எழுதுகிறர்.)

அடைதற்கரிய மானிட யாக்கையை யெய்திய நாம் சாதிக்க வேண்டியதென்ன ? இப்பிறவியை ஆண்டவன் நமக்களித்ததின் நோக்கமென்ன ? அறம், பொருள், இன்பம், வீடு யெனும் சதுர் வித புருஷார்த்தங்களை யடைதலன்றே நாம் சாதிக்க வேண்டியது. இறைவனது நோக்கமும் அதுவல்லவா ? அறம் புரிதற்கும், பொருளீட்டற்கும். இன்பஞ் சுகித்தற்கும், இறுதியில் வீட்டையடைதற்கும் இன்றியமையாதது திடசரீரம். ஆகவே இவ்வுலகத்தில் உயிரோடு வாழுந்தனையும், நோய்வாய்ப்படாமல் திடசரீரியாயிருக்க வேண்டும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழி வலியுறுத்துவது போல் நோயில்லா வாழ்க்கையை விட மேலான செல்வம் பிறிதொன்றுண்டோ ? பிணியின்றி சரீர சுகத்தைத்தருவன பல. அவற்றுள் அதிமுக்கியமானது எதுவென ஆராயப்புகின் தேகப்பயிற்சி யென்று தெளிவாகும், தேகப்பயிற்சியைத் தேவையான வரையில் அடைந்து வந்தால் அது தேகதிடத்தையும் நீங்காத சுகத்தையுந் தருமென்பதற் கையமில்லை. கல்வியில் அல்லது செல்வத்தில் மிகுந்தவராயிருக்கு மொருவர் தேகபலமில்லாமல் நொயால் வாடி யிருந்தால் அவரால் ஏற்படும் நன்மையென்ன ? ஆகவே எவருக்கும் மனேபலம் மட்டுமிருந்தால் போதாது. தேகபலமும் வேண்டும். தேகபலம் பெற தேகப்பயிற்சி செய்யவேண்டும்.

தேகப்பயிற்சி (தேகம் + பயிற்சி) யென்பது சரீரத்திற்கு அளிக்கும் அப்பியாசம் அதாவது வேலை யென்று பொருள் படும். வேலை செய்வது எந்த உயிர்க்கு மியல்பு. அவயவங்களைப் படைத்த அனைத்தாய ஜீவன்களும் வேலை செய்வதே விசேஷம். நானுவித விலங்குகளையும் பாருங்கள். உருவத்தில் பருத்த யானை முதல் மண்ணில் உதிக்குங் கடைசி அணுப்பூச்சி வரையில் யாவும் இடைவிடா முயற்சியினுலேயே உயிர் வாழ்கின்றன. வலிமை மிக்க சீயமேனும் பிரயாசையின்றி வசிக்கின்றதா ? இல்லை. அதுவும் ஆடி

யலேந்து இரை தேடியே பிழைக்கின்றது. அப்படியிருக்க, மக்களில் பெரும் பான்மையோர் பாடுபட்டு உழைத்து உயிர் வாழ ஏனையோர் ஏன் தேகபலத்திற்காதாரமான தேகப்பயிற்சியில்லாமல் வீணராய் ஜீவிக்கவேண்டும்? இதற்கா ஆண்டவன் அவயவங்களையளித்தார்? நாம் அவைகளைத் தக்கவாறு உபயோகிக்கும்படியன்றோ? கண்கள் காண்கின்றன. செவிகள் கேள்க்கின்றன. நாசி சுவாசிக்கின்றது. வாய் பேசுகின்றது. ஏனைய உறுப்புகளும் உடம்பு மேன் உழைத்தலாகாது? சில உறுப்புகள் வேலை செய்யாமற் சோம்பியிருக்கலாமா? வறிஞரும் தொழிலாளரும் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு வேலை செய்கிறார்களென்றால் தனிகரும் பிறரும் ஏன் தங்கள் தேக சுகத்தைக் கோரி தேகப்பயிற்சி செய்யக் கூடாது.

மாந்தர்களுக்குள்ளது எண்சாணுடம்பு, இந்த எண்சாணுடம்பில் எத்துணை மூட்டுகள், எத்துணை நரம்புகள், எத்துணை இரத்தத் தாரைகள் மூட்டுகள். இவை மடங்கி நிமிரக்கண்டிப்பாய்த் தேகபயிற்சி வேண்டும். நரம்புகள் தளரவும் இருதயத்தினின்று இரத்தம் புறப்பட்டுத் தாரைகள் வழியோடி மறுமுறையும் தன்னிடம் வந்து செரவும் நடக்க வேண்டும். அசைய வேண்டும். நானாவித வேலைகள் செய்ய வேண்டும். தேகப் பயிற்சி செய்தால் கண்டிப்பாய் மயிர்க்கால் வழியே துர்நீர் வியர்வை மயமாய் வெளிப்படும், இரத்தஞ் சுத்தியடைந்து உடலாதி யந்தமும் தடையின்றி யோடி உடல் முழுவதற்கும் நன்மையை நல்கும். அது காலை கால் நோயில்லை. தலைநோயில்லை. மற்ற எந்த வியாதியு மேற்பட இடமில்லை. சகல உறுப்புகளும் தத்தம் தொழிலை பகற் பொழுதில் பயில்கின்றன. இரவில் அனைத்தும் ஒருங்கே ஓய்வெடுத்துக் கொள்கின்றன, இத்தைய வுடல் எவ்வாறு விளங்கும்? பெருத்துப் பருத்து அளவை மிஞ்சிய பூதம் போலிருக்குமா? அல்லது காணச் சகியாத எலும்புந் தோலுமான தேவாங்கை யொக்குமா? இல்லை. இல்லை. கண்கள் களிக்கும் கட்டழகுடைத்தாய் விளங்கும். இவ்வித சரீரத்தைக் கண்ட எலியாம். இவ்வித சக்ரத்தைக் கண்ட பிணியும் பிறவும் பூனையைக்கண்ட எலியாம். இவ்வித சரீரம் பெற்றவனை அனைவரும் நாடுவர். இவன் இல்லறத்தைக்கைக் கொண்டு மணம் புரிந்து கொள்வானானால் காலக்கிரமம் தவறினும் தவறும், அவனுக்குப்புத்திரப்பேறு தப்பவே தப்பாது. தன் ஜீவிய

210573

காலத்தில் அரிய பெரிய காரியங்கள் பல இயற்றுவான். தேகப் பயிற்சி கொண்ட தேகத்தாற் வரும் சுகத்தைக் கூறவேண்டுமாயின் நாளாகும், வாரமாகும், மாதங்களாகும், வருஷமாகும். நிறக தேகப்பயிற்சியால் வரும் பயனை யறியாது மெத்த பலஹீனர்களாக வும், அநேக நூதன வியாதிகளை யுடையவர்களாகவும், அற்ப ஆயு ளுடையவர்களாகவு முள்ள நம்மவர் நமது முன்னோர் தங்கள் உழைப் பால் நல்ல திடகாத்திரம் பெற்று, நோயற்ற வாழ்வினராய் நீண்ட காலம் இன்ப வாழ்க்கை யெய்தினர் என்பதை அறிய உதாரண மாகக் கீழே ஒரு சரிதம் தருகிறோம்.

பண்டையில் நமது பார்த்திபரொருவர் தமது ஓய்வு நேரத்தில் தம் மனைவி மக்களோடு நாடோறும் கொட்டை நூற்றும், பாவோ ட்டியும், தறிப்பூட்டி நெய்தும் கச்சைகளைப் பின்னுவார். நேர்த்தி யான பீதாம்பரங்களை நெய்வார். இன்னும் எண்ணிறந்த வேலை களைச் செய்வார். அவர் தம்மாலும் தமது பெண்டு பிள்ளைகளா லும் நெய்யப்பட்ட உடைகளை யன்றி பிறவற்றை உடுத்தார். அவனி யாளும் அரசர்க்குக் குறை வென்ன? அன்றி இவை கிடைப்பதரி தா? ஒரு குறைவும் அரிது மில்லை. அவ்வாறாயின் ஏனப்படிச் செய்தார்? அப்பெரியார் சிருஷ்டியின் தன்மையையும் தேகப்பயிற் சியின் பெருமையையும் அதனால் தமக்கு வரும் சுகத்தையும் ஆய்ந்த றிந்தவராதலால் அவ்விதம் உழைத்தார். ஆனால் கைத்தொழிலை, முக்கியமாய் எதையும் அலட்சியஞ் செய்யும் நம் சகோதரர் யாது சொல்வர்? நெசவுத்தொழில் நிசிதமாயிற்றே, அரசன் எவ்விதம் அத்தொழிலைச் செய்தார்? எப்படிச் செய்யக் கூடும்? வெட்கம், பேரவமானம் என்பர். இவ்வித அற்ப அறிவாலேயே நம் நாட் டார் மேனாட்டாருடன் சகல விஷயங்களிலும் பின்னடைந்து கடை சியில் அவர்கட் கடிமை யானார்கள்.

ஆகவே தேகப்பயிற்சி அவசியம் வேண்டற்பாலது. ஒவ்வொ ருவரும் தேகப்பயிற்சியைக் கைக்கொண்டு ஒழுகினாலன்றி வாழ்க் கையை இன்பமாய் நடத்த இயலாது. முக்கியமாய் நம் நாட்டில் கற்றவர்களே தேகதிடனின்றி யிருக்கின்றார்கள். மாணவர்களில் பெரும் பான்மையோர் தேகப்பயிற்சியை வெறுக்கின்றனர். மாண வர்களும் அறிவைக் கொண்டு உழைக்கும் உத்தியோகஸ்தர்களும் நாள்தோறும் ஒரு மணி நேரமாவது தேகாப்பியாசம் செய்யவேண் டும். அதுவும் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் செய் வதுதான் மிகச் சிறந்தது.

தேகப்பயிற்சி பலவகையாகும். அன்றி வயதுக்குத்தக்கவாறு மாறுபடவேண்டும். சிறுவர் ஆடுதல், ஓடுதல், குதித்தல் முதலானவற்றில் பழகவேண்டும். வாலிபர் பந்தாடுதல், கசரத்துச் செய்தால், தண்டால், பஸ்கி போடுதல் முதலிய அப்பியாசங்களைச் செய்ய வேண்டும். வயோதிகர் நடத்தல், வண்டி யேறி சவாரி செய்தல் முதலியவற்றில் பயிற்சி செய்யவேண்டும். இதனால் சிறுவர் முதல் விருத்தர் வரையில் அனைவர்க்கும் தேகப் பயிற்சி வேண்டுமென்பது அவசிய மாகிறது.

எதையும் படித்தலால் பயனில்லை. படித்தபடி நடந்து அதனால் வரும் பயனை யடைய வேண்டியதே முக்கியமாகும். ஆகவே அனைவரும் தேகப்பயிற்சி செய்து சுகவாழ்வு வாழ்வாராக.

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சோக்கலிக்கம்பிள்ளை எழுதியது)

(முன் 160ம் பக்கத் தொடர்ச்சி.)

III

மதுசாரம் சூக்குமரந்திரத்திற்கு ஆகாரமாகாது.

பீர், ஒயின்கள், சாராயங்கள்—உபயோக மற்றவைகள், அதிகப்பணஞ் செலவாகின்றது, அது, வீண்செலவு.

ஒயின், வெறியுள்ள மதுபானங்களில் மதுசாரந் தவிர வேறு வஸ்துக்களில்லையா? அவை தேகத்தை வளர்க்கவா?

பீர்களில்	சொற்பம்	அதிகம்
ஒயின்களில்	ஆகாரம் மிகச் சொற்பம்	மதுசாரம் மிகஅதிகம் இருக்கிறது.
சாராயங்களில்	இல்லை	இன்னும் அதிகம்.

“பீர்கள், ஒயின்கள், சாராயங்கள் இவைகளால் நமக்கு உண்மையில் பிரயோசனமில்லை. ஏனெனின், அவை, நம்மை

வளர்க்கவும், தேகத்தைத் தேய்வில்லாமல் வைக்கவுமுடியாது. அன்றியும், அவை நம்மைப் பலமுள்ளவர்களாகவும் அல்லது உஷ்ண முள்ளவர்களாகவுஞ் செய்ய இயலாது. அவை தேகத்தைப் போஷிக்கவுங்கூடாது.'' Board of Education, London.

"கோதுமை ரொட்டியிலிருந் தெடுத்துருட்டிய ஒரு சிறு மாத்திரை அளவில் எவ்வளவு ஆகாரப் பொருளிருக்குமோ, ஏறக் குறைய அவ்வளவு ஆகாரமே ஒருபயின்ட் பீர்களிலிருக்கின்றது'' மத்தியஸ்தன் (The Referee).

ஆகாரம் எங்கே இருக்கின்றது.

"வெறியுள்ள மதுவிலிருந்து ஆகாரத்தை எதிர்ப்பார்ப்பது ஒருகோதுமை மணியைப் பெறுவதற்கு ஒரு மூட்டை உமியைத் தின்பது போலாகும்.'' Lord Playfair.

"ஒரு தேக்கரண்டி ஆகாரம் பெறுவதற்கு ஒருமனிதன் பத்து பயிண்ட் பீர் குடிக்க வேண்டும்.'' (ஒருபயிண்ட் ஏறக் குறைய இரண்டரை ஆழாக்கு). Dr. Norman Kerr.

உனக்கு ஒரு தேக்கரண்டி ஆகாரம் வேண்டுமானால் நீயொரு தேக்கரண்டியை முட்டையின் மேற்புறமாக வுள்ளே புகுத்து, அதில் உனக்கு ஒரு தேக்கரண்டி ஆகாரங் கிடைக்கும். ஒரு முட்டையின் விலை 1 அணு ஆகுமாயின், அதில் ஆறிலொருபங்கு எடுத்துக் கொண்டால் அதன் விலை 2 பையாகிறது. ஒரு பயிண்ட் பீரின் விலை 8 அணு விகிதம் 10 பயிட் பீரின் விலை 8×10, 80 அணு ரூபா 5 ஆகிறது. ஆகையால், 2 பை ஆகாரங் கிடைப்பதற்கு ஒருவன் ரூபா 5 விலையுள்ள பீர் குடிக்க வேண்டும்.

இதனை வேறு விதமாகக் கணக்கிடலாம். 2 பை விலையுள்ள முட்டை ஆகாரங் கிடைப்பதற்கு ரூபா 5. விலை கொடுக்க வேண்டுமானால், முழுமுட்டை ஆகாரங் கிடைப்பதற்கு 6×5 ரூபா 30 விலை கொடுக்க வேண்டும். அதுவும் அதிகமதுசார விஷஞ் சேர்ந்த தேயாம். பீருக்காகச் செலவிடும் ரூபா 30க்கும் எவ்வளவு உயர்ந்த ஆகாரம் வாங்கலாம். பட்டினி கிடந்து பசியால் வருந்தும் எத்தனை ஏழைவயிறுகளை அவ்வாகாரத்தால் நிரப்பலாம், பீர் குடிப்பவர்களே ! நினைத்துப்பாருங்கள்.

"மதுசாரம் அபாயமானதும் விஷமானதுமாகும். ஜனங்கள் அதனைக்குடிப்பதால் அவர்கள் தங்களைத் தாங்களே விஷமூட்டிக் கொள்ளுகிறார்கள்.'' Board of Education, London.

பால், சூக்குமரந்திரத்திற்கு ஆகாரமாகும்.

நாம் பாலையும் பீரையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

(1) ஒரு பயிண்ட் பாலிலுள்ள பாலாடை (Cream)யில் கொழுப்புஞ்சர்க்கரையும் அதிக மிருக்கின்றன. அவை, போதுமான உஷ்ணந்தரும் ஆகாரங்களாகும். ஆனால், அதே பகுதியை பீரில் பெறுவதற்கு ஒருவன் குறைந்தது 14 அவுன்ஸ் மதுசார விஷஞ்சேர்ந்த 14 பயிண்ட் பீர்குடிக்க வேண்டும்.

(2) ஒருபயிண்ட் பாலில் தசை, மூளை, நரம்புகளிவற்றை வளர்த்துப் பலப்படுத்தும் ஆகாரம் அதிகமிருக்கிறது. அதே பகுதியை பீரில் பெறுவதற்கு ஒருவன் குறைந்தது 20 அவுன்ஸ் மதுசாரஞ் சேர்ந்த 20 பயிண்ட் பீர் குடிக்க வேண்டும்.

(3) ஒரு பயிண்ட் பாலில் எலும்புகளைப் பலப்படுத்தும் தாதுப்/ பொருள் (Mineral Matter) இருக்கின்றது. அதனை பீரில் பெறுவதற்கு ஒருவன் 7 பயிண்ட் பீர் குடிக்க வேண்டும்.

(4) பாலில் விஷ மில்லை,

பீரில் கொடிய விஷமிருக்கிறது—அது மதுசாரம்.

தண்ணீருக்கு மாறனது மதுசாரம்—Water V. Alcohol.

தண்ணீர் சூக்குமரந்திரத்திற்கு ஆகாரமாகும், ஆகவே, தண்ணீருக்கும் மதுசாரத்திற்கும் வித்தியாச மென்ன வென்று விசாரிப்போம்.

தண்ணீர், சூக்குமரந்திரங்கள் வேலை செய்வதற்குச் சக்தி கொடுக்கிறது. மதுசாரம், சூக்குமரந்திரங்கள் வேலை செய்வதினின்றுந் தடுக்கிறது. அவை, ஒன்றுக்கொன்று விரோதம். தண்ணீர் எதைச் செய்யக் கூடுமோ அதனை மதுசாரஞ் செய்ய முடியாது. மதுசாரஞ் செய்யக் கூடியதைத் தண்ணீர் செய்ய முடியாது. தண்ணீர் தேகத்தைக் குளிரப்பண்ணுகிறது, சோகந் தீர்க்கிறது, இளைப்பாற்றுகிறது. மதுசாரந் தேகத்தை எரிக்கிறது. தண்ணீர் எல்லா ஆகாரத்தையும் இளக்குகிறது, மேன்மையாக்குகிறது. மதுசாரம், ஆகாரத்தை இறுகச் செய்கிறது, கடினமாக்குகிறது. தண்ணீர், தாகத்தைத் தணிக்கிறது. மதுசாரம், தாகத்தை அதிகரிக்கிறது. தண்ணீர், எல்லாவுயிருள்ள சூக்குமரந்திரங்களிலுங் காணப்படுகிறது. மதுசாரம், எந்தவுயி

ருள்ள சூக்குமரந்திரங்களிலுங் காணப் படுகிறது. இவ்வுண்மைகளால் தண்ணீர் எல்லாவுயிருக்கும் அவசியமாகிறதென்றும், மதுசாரம் எந்த வுயிருக்கும் அவசியமேயில்லை யென்றுந் தெரிகிறது.

மதுசாரம் உயிருக்கு அவசியமாகுமானால், இத்தேசத்தில் என்றுங்குடியாத இலட்சம் இலட்சமான புருடரும் பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் இறக்க வேண்டுபவரேயாம். சூரியன் கீழ்ச் சீதோஷ்ண நிலைமைக்குரிய தேசங்களில் இலட்சம் இலட்சமான சனங்கள் பல வித கைத்தொழிலையும், அறிவைக்கொண்டு செய்ய வேண்டிய வேலைகளையுஞ் செய்து ஜீவித்து வருகிறார்கள். அவர்கள், மயக்கந்தரும் எவ்வித மதுபானமுஞ் செய்யாதிருந்தும் உயிரோடிருக்கிறார்கள். பலவகை விளையாட்டுக்களில் வெற்றி பெற்று மேன்மை யடைகிறார்கள். அவர்கள் தங்கள் ஆயுட்காலத்தைச் சுகத்தோடு கழித்து, குடியரினும் நன்னிலைமையிலிருக்கிறார்கள். இவ்வுண்மைகள், பூரணவாழ்க்கையின்பம் அனுபவித்தற்கு மதுசாரம் வேண்டுவதேயில்லை யென்பதை மெய்ப்பிக்கின்றன வல்லவா? ஆகலின்.

மதுசாரம், தண்ணீரின் இடத்தைப் பெறக்கூடுமானதேயல்ல அது, தண்ணீருக்கு முற்றும் மாறானதேயாம்.

ஆகாரத்திற்கும் மதுசாரத்திற்குமுள்ள வித்தியாசம்.

ஆகாரம் தேகத்திற்குச் சுகங் கொடுப்பதாயும் நன்மை பயப்பதாயுமிருக்கின்றது. மதுசாரம், சுகமுள்ள தேகத்திற்கு எந்நாளுந் தீங்கு செய்வதாயிருக்கின்றது. "தேகம், எவ்விதத்திலும் மதுசாரத்தால் கெட்டுப் போகிறது. அதனால், ஏதேனும் நன்மை யுண்டா? ஒரு காலுமில்லை." Sir Andrew Clerke M. D.

"மதுசாரம், எந்த நிலைமையிலும் எந்த அளவிலும் சுகமுள்ள தேகத்திற்கு நன்மை பயப்பதில்லை" Professor Fick.

ஆகாரம் தேகத்தில் நிரம்பியிருக்கிறது. மதுசாரம் அவ்வாறில்லை. ஆகாரத்தின் உபயோகம் அதிக ஊக்கத்தை அல்லது வேலை செய்வதற்குச் சக்தியைக் கொடுப்பதாகும். மதுசாரத்தின் உபயோகம் ஊக்கத்தைக் குறைக்கிறது. இதனை ஒரு குடியனிடம் பார்க்கலாம்.

வாலிபர்கள் அதிக ஆகாரம் புசித்தல் வேண்டும்; ஆனல் அவர்கள் மதுசாரஞ் சிறிதேனு முகர்ந்து பார்த்தல் கூடாது.

ஆகாரம் வெறும் வயிற்றில் புசிக்கப் படுகிறது. குடியர்கள் வெறும் வயிற்றில் குடிக்கப்படாதெனக் கற்பிக்கப் படுகிறார்கள்.

ஆகார முண்ணும் வழக்கத்தால் எப்போதும் அளவுக்கு அதிக மாக ஆகாரமுண்ணவேண்டு மென்னும் ஆவல் உண்டாவதில்லை. மதுக்குடி வழக்கத்தால் இன்னும் அதிகமாகக் குடிக்க வேண்டு மென்று, அடக்க முடியாத ஆவலுண்டாகின்றது. மதுக்குடியா லுண்டாகும் அக்கொடிய பேராவல், அம்மதுவை அதிக மாகக் குடித்தால்தான் அடங்கும்.

மதுக்குடியின் முக்கிய அபாயங்களி லொன்றிருப்பதைக் கவனிப்போம். ஒருமனிதன் தேநீர் அல்லது காபிநீர் அருந்து கிறவனானல் அவன் மனம் போல அதிங்குடியாமல் நிறுத்தி விடக் கூடு மென்மது நிச்சயமில்லை. ஒரு குடியன் சுயாதீனனான வதற்குக் குடியின் மீதிருக்கும் மன வுறுதி அவனை விட்டு ஒழியும் வரை அக்குடியவனைப் பிடித்திருக்கும் பிடியை யவன் உணர்வது அருமை யினும் அருமையாம்.

டாக்டர் பாடெர்சன் (Dr. Paterson) சொல்வது போல மது சாரம் விஷமாகும். சிலர் அதனை ஆகாரமாகு மென உரிமை பாராட்டுகிறார்கள். அவ்வாறாகுமாயின், அது விஷமுள்ள ஆகார மேயாம்.''

நல்ல ஆகாரஞ் செய்கிறது போல, மதுசாரம் சுகத்தையும் பலத்தையுங் கொடாமல், பலவீனத்தையும் ஊறு பாட்டையும் அழிவையுமுண்டாக்குகிறது. அது, பல சாலியைப் பலவீனனாக்கு கிறது. ஞானமுள்ளவனை அந்த ஞானத்திற் கேதுவாகிய கருவி யைக் கெடுக்கிறது. தீரமுள்ளவனை அச்சமுள்ளவனாக்குகிறது. ஞான முள்ளவனை அந்த ஞானத்திற்கேதுவாகிய கருவியைக் கெடுக் கிறது. தீரமுள்ளவனை அச்சமுள்ளவனாக்குகிறது. பிறரை நேசிக் குங்குணத்தையும் பிறர் துன்பங்கண்டு வருந்து மியல்பையுங் கெடுக் கிறது.

மதுவிரோதிகளே தங்கள் வாழ்க்கையில் சிறந்தவர்களாவார்கள்.

பத்திராசிரியர் குறிப்புகள்

இம்மாதம் 24வ வியாழக் கிழமை மாலை 4 மணிக்கு மாஜி ஹைக்கோர்ட்டு நீதிபதியும், அறநிலையப் பாதுகாப்புக் கழக கமிஷனரும் ஆன சர். டி. சதாசிவய்யரவர்கள் காலகதியடைந்தது கேட்டு மிக வருந்து கின்றோம். சர். சதாசிவய்யர் பிரிட்டிஷ் இந்தியாவில் முன்சீப், செஷன்ஸ் ஜட்ஜ், ஹைகோர்ட்டு ஜட்ஜ் முதலிய பதவிகள் வகித்தும், திருவிதாங்கூர் ஹைக்கோர்ட்டு பிரதம நீதிபதி உத்தியோகம் நடாத்தியும் பெயர்பெற்று விளங்கியவர். இவ்வுயர் பதவிகள் வகித்ததற்காக மட்டும் நாம் அவர்களைப் பாராட்டவில்லை. சர். அய்யரவர்களை விட உயரிய உத்தியோகங்கள் பல வகித்தவர்களும் சட்ட நிபுணர்களும் இந்தியர்களுக் குள்ளே பலர் இருக்கின்றனர். பெரிய உத்தியோகஸ்தர்களைப் பார்த்து பிளந்த வாயோடு வியப்புறுங்காலமும் மலையேறிவிட்டது. மேலே கூறிய உத்தியோகங்கள் வகிக்காதிருப்பினும் சர். சதாசிவய்யரை, பெரியார் கூட்டத்துள் சேர்க்கவல்ல பல அரியகுணங்கள் அன்னாரிடம் செறிந்திருந்தன. அவ்வருங்குணங்களுக்காகவே நாம் அவரைப் பெரிதும் போற்றுகின்றோம். வைதீகத்திமிர் தாண்டவமாடும் தென்னாட்டில் சமத்துவ வாதிகளாய்த் திகழும் உண்மைப் பிராமணர்கள் மிகச் சிலரே. அவர்களுள் தலைமை ஸ்தானம் பெறுதற்குரிவர் சர். சதாசிவய்யரவர்களே யாவர். பேச்சொன்று; செயலொன்று; என்னும் தீயகுணம் சர். சதாசிவய்யரிடம் இல்லவே இல்லை. பேசுவதற் கொப்ப செயலாற்றியும் வந்தார். தன் பெயர்ப் பொருட் கொப்ப சர்வ ஜனங்களிடத்தும் சதா அன்பு மயமாகவே இருந்துவந்தார் (அன்பே சிவமாகலின்). ஆதிதிராவிட மக்களுடன் சமபந்தி போஜனம் செய்த புனிதப் பிராமணன் சர் சதாசிவய்யரொருவரே. சுத்தமான ஆகாரத்தை யாவருடனும் கலந்துண்ணலாமென்பதே அவரது அபிப்பிராயம். வேதத்தை ஒப்புக் கொள்ளுகிறவர்கள் எல்லாம் ஹிந்துக்கள் என்றும், அவர்களுக்குள் பிறப்புப்பற்றி உயர்வு தாழ்வு கற்பிப்பது மூடத்தன மென்றும், ஆலயப்பிரவேசன விஷயத்தில் சர்வ ஹிந்துக்களுக்கும் சம உரிமை யுண்டென்றும், அவர் திருவண்ணமலை ஆலயப்பிரவேச வழக்கில் சாட்சியம் கூறினர். வேதஞானமும் சட்டஞானமும் உடைய இவ்வுத்தமப் பிராமணரின் சாட்சியம் ஹிந்து மதச் சீர்திருத்தக்காரர்களுக்குப் பெருந்துணையா நிற்கு மென்பதற்குச் சந்தேகமே

இல்லை. அற நிலையப்பாதுகாப்பு மசோதா நிறைவேருதொழிய மடாதிபதிகளும் வைதீகப் பார்ப்பனரும் அரசியல் பார்ப்பனரும் வக்கீல் பார்ப்பனரும் ஒருங்குகூடிச் சூழ்ச்செய்து பெருங்கிளர்ச்சி செய்த காலத்து, அம்மசோதாவுக்கு உற்றற துணையாய் நின்று உதவி புரிந்தவர் சர். சதாசிவய்யர் ஒருவரேயாவர். அம்மசோதா நிறைவேறிய பிறகு கமிஷணர் நிலையிலும் அறநிலையப் பாதுகாப்பு விஷயமாக அரிய ஊழியஞ் செய்து வந்தார். சமய சமூக விஷயங்களிலும் உத்தியோக விஷயங்களிலும் தம் மனச்சாட்சிப்படியே நடந்து வந்தார். இவ்வண்ணம் சகல துறைகளிலும் ஒரு உத்தம புருஷராய் விளங்கிய சர். சதாசிவய்யரின் மரணம் இந்தியாவுக்கே ஈடு செய்ய முடியாத ஒரு பெரு நஷ்டமாகும். அன்னர் மரணத்தால் வருந்தும் மக்களுக்கும் சுற்றத்தாருக்கும் நமது அநுதா பத்தைத் தெரிவிப்பதோடு அன்னேரின் ஆத்மாவும் சாந்தி யடையுமாறு திருவருளை வேண்டுகின்ரேம்.

* * * * *

பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை யுண்டு பண்ணும் நோக்கத்துடன், காங்கிரஸ் தலைவர் திரு எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையை வேறேரிடத்து பிரசுரித்திருக்கிறேம். ஹிந்து முஸ்லிம் பிணக்கு வட நாட்டைப் பாழ்படுத்துவது போல், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பகை தென்னுட்டைச் சீர்குலைத்து வருகின்றது. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக திரு ஸ்ரீநிவாஸய்யங்கார் செய்த முயற்சிகள் பயன் பெருதொழிந்தமைக்கு மிக வருந்துகிறேம். ஒரே நாட்டினரான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் உண்மையான அன்பு கொண்டு பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் விசாலமனப் பான்மை பெற்ருலன்றி ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படவே மாட்டாது. மதவெறி கொண்ட ஹிந்துக்களும் முஸ்லிம்களுமே இக்கொடுமைக்குக் காரணராயிருந்து வருகிருர்கள். பசுவதையால் ஹிந்து மதமும் மசூதிமுன் மேளத்தால் இஸ்லாம் மதமும் அழிந்து விடுமென நம்பும் குறுகிய நோக்கமுடைய ஹிந்து முஸ்லிம்கள் இருக்கும் வரை ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமையை நாம் எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்.

தென்னுட்டை வர்ணுசிரமத்திமிர் பாழ்படுத்தி வருகின்றது. ஐரோப்பியரிடம் சமத்துவம் பெறவிரும்பும் பிராம்மணர்கள் தம் நாட்டு மக்களிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பது எதற்கோ அறியோம். திரு. அய்யங்காரவர்கள் அறிக்கையால் தென்னுட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை உண்டாகிவிடு மென்று நாம்

நம்பவில்லை. எனினும் வெகுநாள் பொறுத்தாவது திரு அய்யங்காருக்கு இந்த யோசனை வந்தது நற்காலமென்றே எண்ணுகிறோம். பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் ஒற்றுமைக்கு உண்மையில் நீண்ட அறிக்கைகளும் மகா நாடுகளும் தீர்மானங்களும் ஒப்பந்தங்களும் தேவையில்லை; உயர்ந்தோரெனக் கூறிக்கொள்ளும் பிராமணர்களின் மன மாற்றமே பெரிதும் தேவையானது. இந்தியா சுயராஜ்யம் பெறவேண்டுமானால்—ஜனநாயக அரசாட்சி நிலை பெறவேண்டுமானால்—இந்தியாவில் சமத்துவம் ஏற்பட வேண்டுமென்றும் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பித்து ஏகபோகஉரிமை விழைவது அனர்த்தமென்றும் பிராமணர்கள் உணர்ந்து நடைமுறையில் அவ்வுணர்ச்சியை'பிரத்தியட்சப் படுத்த முற்படுவார்களானால் அன்றே தென்னாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதர் போர் ஒழிந்து விடும். திரு அய்யங்கார் இவ்வுண்மையைக் கருத்திற் பதிப்பாராக!

* * * * *

இந்தியர்களெல்லாம் வெகு நாளாகப் பேராவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த ராயல் கமிஷன் அறிக்கையும் வெளிவந்துவிட்டது. கமிஷனில் வழக்கப்படி இந்தியர்களுக்கு ஸ்தானம் அளிக்கப்படவில்லை, கமிஷன் முழுதும் வெள்ளை மயமாகவே இருக்கின்றது. இந்தியா முழுதும் பகிஷ்கார முழக்கம் எழும்பிவிட்டது. இந்தியர் இடம் பெறாதது பற்றி பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்கின்றார் சிலர், இந்திய அரசியல் நிர்ணயிக்க இந்தியர்களுக்கே உரிமையுண்டாதலால் வெள்ளையர் கமிஷன் எங்களுக்கு வேண்டாமென்கின்றனர் வேறு சிலர். "ராயல் கமிஷன் பேச்சையே கேட்டிராத சுமார் 25 கோடி மக்களை ஒரு சிறிது தொகுதியரான கல்விகற்ற உயர்ந்த ஜாதியாரிடம் ஒப்புவிக்க நாங்கள் மடையர்களா? உங்களுக்குள்ளே எத்தனை ஜாதிபேதம், எத்தனை மதபேதம்! ஹிந்துக்களுக்குப் பிரதிநிதியார்? முஸ்லீம்களுக்குப் பிரதிநிதி யார்? கிறிஸ்தவர்களுக்குப் பிரதிநிதி யார்? சீக்கியர்களுக்குப் பிரதிநிதி யார்? பிராமணரல்லாதாருக்குப் பிரதிநிதி யார்? தீண்டப்படாதாருக்குப் பிரதிநிதி யார்"? என்கின்றார் இந்தியா மந்திரி; அவர் கேள்வியிலும் பொருளில்லாதில்லை. நமது வீட்டை ஒழுங்குபடுத்த நாம் சக்தியற்றவராயிருக்கின்றோம். வடநாட்டில் ஹிந்து முஸ்லீம் போர்; தென்னாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் வழக்கு. சுமார் 6 கோடி இந்தியர்கள் தீண்டப்படாதவர்களாய் வாழுகின்றனர். இந்தக்குழப்பத்தில் சுயராஜ்ய கனவும் கூடவா? ராயல் கமிஷனைப் பகிஷ்கரிக்க, பெயரளவில் ஒரு ஒற்றுமையை யுண்டுபண்ண முயலும் நம் ஜனத்தலைவர்கள் உண்மையான—நிலைவரமான—சர்வ வியாபகமான—ஒற்றுமையுண்டுபண்ண முயற்சி செய்வார்களாக! கண்கட்டுவித்தைகளால் காரியம் ஒன்றும் நடவாது.

தென்னாட்டார் ஒற்றுமை

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் எழுதுகிறார்.

சென்னை மாகாணத்தில் ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த பல ஜாதிகளுக்குள் இருந்து வரும் சச்சரவுகளையும், மனஸ்தாபங்களையும் தீர்த்து வைக்க முயல வேண்டியது அவசியமாயிருக்கிறது. எல்லாக் கட்சியாருக்கும், மாறுபட்ட அபிப்பிராய முள்ளவர்களுக்கு எல்லாம் நீதிவழங்கத்தக்க முடிவு ஒன்று ஏற்படுத்தி இதைத் தீர்க்க வேண்டும். இந்த எண்ணத்துடன் நான் கீழ்க்கண்ட யோசனைகளைக் குறிப்பிட விருப்புகிறேன். இவைகளை ஆதாரமாகக் கொண்டு வாதிக்கலாம் என்று நான் கருதுகிறேன். எனது செந்த ஹோதாவிலேயே நான் இங்ஙனம் யோசனை கூற முன்வந்திருக்கிறேன். எல்லா சமூகங்களின் பிரதிநிதிகளையும் நான் நேரில் பார்த்து ஏதாவது நிரந்தரமான சமரசத்திட்டம் அமைக்க முடியாதா என்று கலந்து பேச உத்தேசித்திருக்கிறேன். இதன்பின் ஒரு ஒற்றுமை மகாநாடு கூட்டி, அதில் முடிவான யோசனைகளை நிறைவேற்றி எல்லோருடைய சம்மதத்தையும் பெற்ற அறிக்கையொன்றை வெளியிடலாமென்று கருதுகிறேன். பொதுஜன வாழ்க்கையிலும், அரசியலிலும் மத சம்பந்தம் இருக்கக் கூடாதென்பது எனது கொள்கை. பூரண சுயேச்சையும், சமத்துவமும், நீதியும் எல்லா ஜாதியாருக்கும் வழங்கினால்தான் தேசீயம் வளர்ந்து ஜனநாயகம்முதிர்ந்து சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கமுடியும்.

உயர்வு தாழ்வு கிடையாது.

1. சுயராஜ்யம் பெற்று இந்தியா முன்னேற்ற மடைய வேண்டுமெனில், சகல ஜாதிகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட்டு ஒருவருக்கொருவர் உதவி புரிந்து அமைதியுடன் வேலை செய்ய வேண்டி யிருத்தலால் ஒரு ஜாதியாரும் பிறப்பினால் உயர் வென்றோ, தாழ்வென்றோ, கருதக் கூடாது. எனவே, எல்லா ஜாதியாரும் உயர்வு வாழ்வின்றி சமத்துவமாகக் கருதப்படவேண்டும். அரசாங்க விஷமங்கள் ஒன்றிலும் ஜாதி பாகுபாடே ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

2. ஜாதி வித்தியாசங்களைக் கொண்டு ராஜாங்க உத்தியோகங்களிலும், கௌரவங்களிலும எத்தகைய தடையும் இருக்கக் கூடாது. எந்த ஜாதியாரும் எந்தத் தொழிலும், வியாபாரமும் செய்யலாம்.

3. அரசாங்க இலாகாக்கள் எதிலும் எந்த ஜாதியாரும் மித மிஞ்சி யிருக்கக் கூடாது. அத்தகைய சுதந்தரம் ஒரு வகுப்பினருக்கும் இருக்கக் கூடாது. எல்லா ஜாதியாருக்கும் சம உரிமைகளும், சமத்துவமான அந்தஸ்தும் உத்தியோக சாலைகளில் வழங்கப்படும். எந்த ஜாதியாரும் அந்தப்பதவிகளுக்கு வர தாரா

ளமாய் வழியிருக்கும். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி லட்சியஞ் செய்யாமல், ஜாதிகளின் ஜனத்தொகையை கணக்கிட்டு பங்கு போட்டுக் கொண்டிராமல், நியாயமாயும், ஒழுங்காயும் எல்லோருக்கும் உத்திமோக ஸ்தானங்கள் அளிக்கப்படவேண்டும்.

4. ஏதாவது ஒரு ஜாதிக்கு நியாயம் வழங்கப்படவில்லை யென்று புகார் ஏற்படில், உடனே அதைப்பற்றி எல்லா ஜாதிப் பிரதி நிதிகளும் அடங்கிய ஒரு சமரசப் பஞ்சாயத்து அமைத்து விசாரித்து நியாயம் வழங்க வேண்டும்.

"சூத்திரன்" என்ற பெயர் தொலைய வேண்டும்.

5. ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் குலத்தின் பெயரை நிர்ணயஞ் செய்து கொள்ளலாம். ராஜாங்கத்தார் அவர்களைப் பற்றி குறிப்பிடும் பொழுதெல்லாம் அந்தப் பெயரையே உபயோகிக்க வேண்டும். விசேஷமாய், பிராமணர்கள் இதர ஜாதியாரைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில் 'சூத்திரன்' என்ற பெயரை உபயோகித்தல் கூடாது. ராஜாங்க நடவடிக்கைகளிலும். தஸ்தாவேஜிகளும் பத்திரிகைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் "சூத்திரன்" என்ற பெயரையே பிரயோகிக்கக் கூடாது.

ஜாதிகளுக்குள் மரியாதை.

6. பிராமணராகிலும் சரி, வேறெந்த ஜாதியாரும் சரி இதர ஜாதியாரை விட எந்த வகையிலும் உயர்வு கொண்டாடக் கூடாது. ஜாதி உயர்வைக் கொண்டு தமக்கு முதல் "தாம்பூலம்" வழங்க வேண்டு மென்றாவது வேறு எத்தகைய மரியாதையாவது கொண்டாட எவருக்கும் உரிமை கிடையாது. பிராமணரோ, வேறு ஜாதியைச் சேர்ந்தவரோ, மற்ற ஜாதியைச் சேர்ந்த எவரும் தங்களை இன்னபடி வணங்க வேண்டும், இன்னபடி தங்கள் முன் உடையணிந்து நிற்கவேண்டும், தங்களைக் கண்டால் இவ்வளவு தூரம் ரோட்டுகளில் ஒதுங்கிப்போக வேண்டுமென்றாவது வற்புறுத்தக் கூடாது. எந்தப் பிராமணரும் பிறஜாதியாரைப் பற்றிப் பேசுகையில் ஏகவசனத்தில் பேசக்கூடாது. சிநேகிதத்தாலோ, நெருங்கிய பழக்கத்தினலோ அல்லது தங்கள் கீழ் ஊழியஞ் செய்வதாலோ சொல்லலாம். மற்றப்படி ஒரு ஜாதியாரைப் பற்றி பேசும் சந்தர்ப்பத்திலெல்லாம் அவதூறாகவோ, அவமரியாதையாகவோ, இழிவாகவோ பதங்களைப் பிரயோகிக்கக் கூடாது. எப்பொழுதும் மரியாதையாகவே பேசவேண்டும். பிற ஜாதிகளுக்கு இழிவான, அவமதிப்பான பேர்களையும் கற்பிக்கக் கூடாது.

சமபந்தி போஜனம்.

7. எந்த ஜாதியாருக்கும் பிற ஜாதியாருடன் சமபந்தியில் உட்கார்ந்து சாப்பிடவோ, சாப்பிட மறுக்கவோ உரிமை யிருக்கிறதை ஒப்புக் கொள்ளுகையில், பிற ஜாதியருடன் உட்கார்ந்து

சாப்பிடுவதைக் கண்டித்து எத்தகைய பிரசாரமும் செய்யக்கூடாது. அதேமாதிரி பிற ஜாதியாரால் தயாரித்த உணவை அருந்தவும், அருந்தாமலிருக்கவும் அவர்களுக்கு உரிமை யுண்டு. அப்படி உயர்ந்த ஜாதியார், தாழ்ந்த ஜாதிமார் வீட்டில் சாப்பிட்டு விட்டதாகவும் கண்டனஞ் செய்யக் கூடாது. இத்தகைய பிரசாரங்கள் ஒரு ஜாதிமாரை அவதூறு செய்வதாகும் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும்.

கலப்பு விவாகமும், ஹிந்து சட்டங்களும்.

8. கலப்பு விவாகம் செய்து கொள்ளுவது அவரவர்களுடைய சொந்த அபிப் பிராயத்தைப் பொறுத்திருக்கிறது. ஒவ்வொரு மனிதருக்கும் தனியாக இதற்கு உரிமையுண்டு. தாழ்ந்த வகுப்பினரை விவாஞ் செய்து கொண்டுவிட்டதாக எத்தகைய கலப்பு விவாகத்தைக் குறித்தும் கண்டனப் பிரசாரஞ் செய்ய கூடாது. அங்ஙனம் செய்தல் அவதூறு என்று கருதப்படும்.

9. ஹிந்துச் சட்டப்படி துவிஜர்களின் வைப்பாட்டி பிள்ளைகளுக்கு உள்ள சொத்துரிமை மற்ற ஜாதியினருக்குள் அம்மாதிரி பிறக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கவேண்டும்.

10. ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் விஷயத்திலும் அதேமாதிரி எல்லா ஜாதியாருக்கும் இந்து சட்டத்தில் சம உரிமைஇருக்கவேண்டும்.

11. பொது ரஸ்தாக்களில் செல்ல எல்லா ஜாதியாருக்கும் சமத்துவமான உரிமை உண்டு. அதே மாதிரி நீதிஸ்தலங்கள், பொது ஸ்தாபனங்கள், எல்லாவற்றிலும் குறிப்பிட்ட தடையுத்தரவு ஒன்றுமில்லாத வரையில் யாரும் பிரவேசிக்கலாம்.

மனச்சாட்சியும், மதாசாரமும்.

1. அவரவர் மதாசாரத்தை தங்கள் மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் அனுசரிக்க உரிமையுண்டு. ஆனால் மேற்குறிப்பிட்டவாறு பிற ஜாதிகளுடைய சுதந்தரங்களை எவ்வகையிலும் அது பாதிக்கக்கூடாது.

2. எந்த ஜாதியாரும், தங்கள் மதாசாரத்தையும், கொள்கையையும் பிற ஜாதியைச் சேர்ந்த எவரையும் எற்கும்படி வற்புறுத்தக்கூடாது.

3. பள்ளிகளில் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் விஷயத்திலும், பொருளுதவி செய்வதிலும் மத விஷயங்களைக் கொண்டுபோய் புகுத்தக்கூடாது. இது விஷயமாய் வித்தியாசங்கள் பாராட்டவும் கூடாது. மத சம்பந்தமான காரியங்களுக்காக நிறுவியுள்ள நிதிகளை ரஸ்தாக்கள் அபிவிருத்தி, தெருக்களில் விளக்குப் போடல், தண்ணீர் வசதிகளை அதிகரித்தல், சாக்கடை கட்டிவிடுதல் போன்ற பொது ஜன சமூக நன்மைக்கான வேலைகளில் தகுந்த ஈடு செய்து விட்டு உபயோகித்துக் கொள்ளலாம். வேறெந்தக் காரியங்களுக்கும் அந்த சொத்தை வினியோகஞ் செய்யக் கூடாது.

மத சம்பந்தமான விஷயங்களைப்பற்றி நான் தீர முழுதும் என் கருத்துக்களை வெளியிடவில்லை. அவைகளை எல்லா சமூகப் பிரதிநிதிகளுடனும் தனிமையாகக் கலந்து பேசிய பின்னர்தான் முடிவு செய்து கொள்ளக்கூடும்.

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2	0	0
தென்னுபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ. 40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ. 50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)	ரூ. 8	0	0
அரைப்பக்கம் ஷை	ரூ. 4	0	0
கால்பக்கம் ஷை	ரூ. 2	8	0

சிறந்த வாசனை

ஊது வத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி சேர் 1-க்கு	6—0—0
அம்பர் வத்தி ,, 1-க்கு	5—0—0
கிலீட் வத்தி ,, 1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி,, 1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

உபயோகித்து ஸ்திரீகளுக்கு சுகப்பிரசவசஞ்சீவியெனமதிக்கப்பட்ட

சுகப்பிரசவ மாத்திரைகள்.

அபாயமின்றி அதி சீக்கிரத்தில் வேதனையில்லாமல் சிசுவை ஆரோக்கியமாய் பிறக்கச் செய்கிறது.

(நியோ ஈசி டெலிவரிபில்ஸ் Neo Easy Delivery Pills.)

புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

நியோ பால்டு க்யூரா. Neo Bald Cura.

(நியோவழுக்கை நிவாரணி)

தலை வழுக்கை, முக வழுக்கை, சொட்டை, சுண்டு, முதலிய வற்றை எவ்வளவு நாள் பட்டதாயினும் நிவர்த்திக்கும், மயிரை அடர்ந்து தடித்து வளரச் செய்யும், மயிர் விழுவதை நிறுத்தும். அநேகரால் உபயோகித்து குணமடையச் செய்த சிறந்த சிரோ ரோக நிவாரணி. புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

நியோ பிலட் டானிக் Neo Blood Tonic.

(நியோ இரத்த சுத்த விருத்தி திரவம்.)

கெட்ட ரத்தத்தை சுத்தி செய்து திரேக பலத்தையும், ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புட்டி 1-க்கு விலை ரூ. 3-8-0.

நியோ கால்ரா ட்ராப்ஸ் Neo cholera Drops.

(காலரா நிவாரணி)

இரண்டொரு தடவை கொடுத்தவுடன் மலப்போக்கை நிறுத்தி சொஸ்தப் படக்கூடிய ஓர் கைகண்ட சிறந்த ஔஷதம். விலை புட்டி 1-க்கு ரூ. 1—4—0.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

Neo Scientific Pharmacy—ல் கிடைக்கும் Easy Delivery Pills களை நான் என் குடும்பத்தில் இரண்டு பிரசவங்களுக்கு கொடுத்ததினால் ஷை மாத்திரைகள் மிகவும் சுகமாகவும் குழந்தைக்கும் தாயாருக்கும் யாதொரு அபாயமுமின்றி சீக்கிரத்தில் குழந்தையை வெளியாக்குகிறது. நான் இதுவரையில் இவ்வளவு சுகமான மாத்திரைகள் பார்த்ததில்லை. இந்த மாத்திரைகளுக்கு சுகப்பிரசவ சஞ்சீவினி என்றும் பெயர் கொடுக்கலாம்.

(Sd) S. ராஜம் அய்யர், மிட்டாதார், பாணம்பட்டு.

கிடைக்குமிடம் :—

Neo Scientific Pharmacy, Villupuram S. I. Ry.

நியோ சயின்டிபிக் பர்மசி, விழுப்புரம்.

ஏஜண்டு:—மேசர்ஸ். தாதா அண்டு கோ.,

சைனபஜார் ரோட், மதருஸ்

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஜீவாமிருதம்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும். பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுச்கு மிசவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப், பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287, Madras.**

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மேடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

ஷண்முகம்

பட்டணம்பொடி

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.		விலை.			தபால்சிலவு.			பாக்கிங்.			மொத்தம்.		
8	ரூ.	1	0	0	0	5	0	0	1	0	1	6	0
20	,,	1	12	0	0	8	0	0	2	0	2	6	0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

ஸ்ரீ முனியோஸா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாதம் வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு $\times 2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, : : MADRAS.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

வில்க் ஹவுஸ் : :: காசி

HALF-TONE BLOCKS.

Copper 8 as. Square inch.
Zinc 6 as. Square inch.

LINE BLOCKES.

Copper 10 as. Square inch.
Zinc 4 as. Square inch.

Special Drawings if any will be charged. Charges for extra. Enlargement of photos and oil paintings On enquiry.

2 Months Only

INNER 15"×12" Rs 7-8 OUTTER 20"×16"
SIZE

Send Your Photos for Bromide

Enlargements Highly Finished as Life Like

PRINCE STUDIO

ARTISTIC PHOTOGRAPHERS
HALFTONE BLOCK MAKERS.
90. W. RD. MOUNT ROAD. MADRAS.



நீடித்து
உழைப்பதில் கீர்த்தி
பெற்றதும் எங்களு
டைய எழுத்து மூல
மான உத்திரவாதம்
உடையதும் அமரிக்
காவில் ஒரு பழமை
யான கம்பனியாரால்
தயாரிக்கப் படுவது
மான

யூனிவெர்ஸல் பாட்டரியை

உங்கள் மோட்டார் வண்டிகளில் அமைத்து பூரண திருப்தி அடையுங்கள்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள் :—

விலை குறைவு.

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ற்றிக் ஒர்க்ஸ்
மோட்டர் எலக்ற்றிக் எஞ்சினியர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

கையிலிருந்தாலும் அழகு !

பன்னிரு இதழ்களையும் ஒன்றாய்ச் சோத்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னை.

தமிழ்நாடு
210373

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு, ஜரிகையினால், "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முக தலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும், ஸ்திரீகளுக்கு, இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேக மில்லை.

No. 1.	16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ.	38	0	0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	44	0	0
No. 2.	16 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	30	0	0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	36	0	0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருது வாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷை கொடி (Lacha) முதலி யவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ.	52	0	0
18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ.	60	0	0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.

EXPORT DEPARTMENT

Post Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade, *Phone: No. 2693.*

OFFICE OF THE ... No. ... DEC ... MADRAS

முத்தையாஸ்

நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும், பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளூ, முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப் பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room: 287, Esplanade. *Phone: No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.